இனி து ரகசியம் அல்ல!

"யுத்தக் குற்றமா'?'
"போராடுவோம்.'
"ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படவில்லையா?"
"போராடுவோம்."
"அரசியல் கைதிகள் விடுதலைக்கு... ?"
"போராடுவோம்." பக்கம் 02 »

பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikathir

விழயல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | மாசி 22 | புதன்கிழமை 06.03.2019 | கதிர் 122



நுண் நிதிநிறுவனங்களுக்கு எதிராக 8 ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டம்

உள்ளே பக். 03




அமெரிக்காவுடன் இலங்கை இரகசிய பாதுகாப்பு உடன்பாடு

உள்ளே பக். 09

தொடர்ந்து முதலிடத்தில் மன்செஸ்டர் சிற்றி

உள்ளே பக். 10



## ஒரே பார்வையில் பட்ஜெட்!

கொழும்பு, மார்ச் 06
★இலஞ்ச,ஊழல்ஆணைக்குழுவினை வலுப்படுத்த 10 கோடி ரூபா ஒதுக்கீடு
★ படைவீரர்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்படும். பக்கம் 11 »

## இளம் தம்பதிகள் வீடு வாங்க ரூ. ஒரு கோடி சலுகைக் கடன்

கொழும்பு, மார்ச் 06
திருமணம் முடித்த இளம் தம்பதிக்கு சிறப்புச் சலுகைகளுடன் கடன் திட்டம் 'ஹோம் சுவிற் ஹோம்' என்ற பெயரில் அறிமுகப்படுத்தப் பக்கம் 02 »

## வாகன விலைகள் மீது அதிரடி!

கொழும்பு, மார்ச் 06
2019ஆம் ஆண்டுக்கான புதிய வரவு-செலவுத்திட்டத்தில்வாகனங்களின் விலைகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பக்கம் 11 »

## அரச ஊழியர்களுக்கு ஜூலை முதல் 2,500 ரூபா சிறப்புக் கொடுப்பனவு!

கொழும்பு, மார்ச்
2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில்அரசஊழியர்களுக்கு 2,500 ரூபா விசேட கொடுப்பனவு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அனைத்து அரச பக்கம் 11 »

## சிகரெட் விலை உயர்வு!

கொழும்பு, மார்ச் 06
சிகரெட்டின் விலை நேற்று நள்ளிரவிலிருந்து 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என நிதி பக்கம் 11 »



## காப்புறுதி நிறுவன முகாமையாளர் கொடூரமாக வெட்டிப் படுகொலை!

### கிளிநொச்சியில் நேற்றுக் காலை கோரம்

கிளிநொச்சி, மார்ச் 06
கிளிநொச்சி, உதயநகர் கிழக்கு பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் இன்று காலை வெட்டிப் படுகொலை பக்கம் 11 »



# புதிய அரசமைப்புக்கு அமெ. பூரண ஆதரவு!

### சம்பந்தனிடம் எடுத்துரைத்தார் அந்நாட்டுத் தூதுவர்

கொழும்பு, மார்ச் 06
இலங்கையில்தற்போது இடம்பெற்று வரும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்கு அமெரிக்கா தன்னாலான முழுமையான ஆதரவையும் வழங்கும் என அந்த நாட்டுத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் உறுதிபடத் தெரிவித்துள்ளார். பக்கம் 11 »





## 11 தமிழர் கடத்தல் விவகாரம் கோட்டாபயவுக்கும் தெரியும்!

### அவரையும் மாட்டிவிட்டார் கரன்னகொட

கொழும்பு, மார்ச் 06
கொழும்பில், 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட விவகாரம் குறித்து முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் அறிவார் என்று இந்த விவகாரத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் பக்கம் 11 »

## யாழில் சீனத் தூதுவர்

யாழ்ப்பாணம், மார்ச் 06
இலங்கைக்கான சீனத் தூது வர் செங் சூயுவான் நேற்று யாழ்ப் பாணம் வருகை தந்தார். இன்று மாலை பக்கம் 02 »

## பட்ஜெட் குறித்து ஆராய்ந்தே முடிவு என்கிறார் சம்பந்தன்



கொழும்பு, மார்ச் 06
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த பட்ஜெட்டை ஆதரிப்பதா, இல்லையா என்பது குறித்து ஆராய்ந்து முடிவு எடுப் பக்கம் 11 »

## வடக்கு – கிழக்கு அபிவிருத்திக்கு பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்கீடு

### சுமந்திரன் எம்.பி. பாராட்டு



கொழும்பு, மார்ச் 06
வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு விசேடமாக 500 கோடிரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும் எனத் பக்கம் 02 »

## மிருசுவிலில் விபத்து: தாய், மகன் படுகாயம்



யாழ்ப்பாணம், மார்ச் 06
மிருசுவில் ரயில் நிலையத்துக்கு அண்மையில் நேற்று மாலை, போக்குவரத்துப் பொலிஸாரின் கவன பக்கம் 11 »

## ஏமாற்றும் பட்ஜெட்

### சாடுகின்றார் மஹிந்த



கொழும்பு, மார்ச் 06
நிதி அமைச்சரும் அரசும் மக்களைத்தொடர்ந்தும்ஏமாற்றிவரிகளை கொண்டு ஆட்சியை நடத்த முயற்சி செய்கின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த பக்கம் 11 »


## தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தும் திட்டமேதும் பட்ஜெட்டில் கிடையாது

### சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 06
வடக்கு - கிழக்கில் பெரும் பிரச்சினைகள் உள்ளபோதும்பட்ஜெட்டில்குறுகிய அளவிலேயே திட்டங்கள் முன்வைக்கப்பட் பக்கம் 11 »

# கல்விச் சுற்றுலா வந்த பஸ் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு; 40 பேர் காயம்



அக்கரைப்பற்று – அட்டாளைச் சேனையிலிருந்து கல்விச் சுற்றுலா வந்தபஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த விபத்தில் 40 பேர் வரையில் காயமடைந்துள்ளனர் எனவும், அவர்கள் கண்டி – மாவனல்லை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த விபத்து கடுகண்ணாவையில் இன்றிரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்தில் பஸ் நடத்துனரே உயிரிழந்திருக்கிறார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்திற்குக் காரணம் எனப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பாசையூர் மீனவர் வலையில் சிக்கியது இராட்சத மீன்!



யாழ்ப்பாணம், மார்ச் 06

பாசையூர் பகுதியில் மீனவர்களின் வலையில் நேற்று முன்தினம் 104 கிலோ எடையுள்ள இராட்சத மீன் ஒன்று சிக்கியுள்ளது. இந்த மீனை ஏலத்தில் விட்டபோது எவரும் விலைக்கு வாங்கவில்லை. இதனால், மீனை விற்பனை செய்வதற்காக யாழ்ப்பாணம் மீன் சந்தைக்கு கொண்டு சென்றதாக மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# ஆட்சிக்காலம் முடிவதற்கு முன்னர் யாழுக்கு அதிவேக நெடுஞ்சாலை

## நிதி அமைச்சர் மங்கள திட்டவட்டம்

எமது அரசின் ஆட்சிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் கொழும்பு – யாழ்ப்பாணம் இடையிலான அதிவேக நெடுஞ்சாலைப் பணிகளை நிறைவு செய்வோம் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர அறிவித்தார். பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நாடாளுமன்றத்தில் நேற்று பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனைச் சமர்பித்து உரையாற்றிய நிதியமைச்சர் மங்கள சமரவீர–

பருத்தித்துறை மற்றும் பேசாலையில் மீன்பிடி துறைமுகங்களை அமைப்பதற்கு 13 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது– என்றார். (ஐ)

# இராணுவ நினைவு வருடம் ஜனாதிபதியால் பிரகடனம்

இராணுவ வெற்றியின் பத்து வருட நிறைவை முன்னிட்டு இராணுவ நினைவு வருடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து எமது தாய்நாடு விடுவிக்கப்பட்ட இராணுவவெற்றியின் பத்து வருடங்கள் நிறைவை முன்னிட்டு இராணுவ நினைவு வருடத்தைப் பிரகடனப்படுத்துவதற்கு ஜனாதிபதி பணிப்புரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஆட்புல எல்லை மற்றும் இறைமையைப் பாதுகாப்பதற்காக உயிர்நீத்த, காணாமற்போன மற்றும் அங்கவீனமுற்ற இராணுவத்தினருக்குத் தேசத்தின் கௌரவத்தைச் செலுத்துவதற்கும் நினைவுகூருவதற்கும் ஒவ்வொரு வருடமும் இராணுவ நினைவு மாதம் பிரகடனப்படுத்தப்பட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன.

இராணுவ வெற்றிக்கு பத்து வருடங்கள் நிறைவடையும் இந்த 2019ஆம் ஆண்டில் இராணுவ நினைவு வருடத்தைப் பிரகடனப்படுத்தி பரந்தளவிலான வேலைத்திட்டங்களை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதியின் வழிகாட்டலில் ரணவிரு சேவா அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இராணுவநினைவுவருடத்தை பிரகடனப்படுத்தி அதனுடன் இணைந்ததாக முன்னெடுக்கப்பட்டுள்ள இராணுவக் கொடி இயக்கத்தின் முதலாவது கொடி ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் [illegible]மிக்கலிபணகேவினால் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அணிவிக்கப்பட்டது

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*"பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கச் செய்வதற்கு?"*

*"போராடுவோம்."*

*"காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்கு?"*

*"போராடுவோம்."*

– இப்படி எதற்கெடுத்தாலும் போராடுவோம், விரைவில் போராட்டம் வெடிக்கும் என்று 'பீலா' விடும் நமது அரசியல் தலைவர்கள் மத்தியில் இவ்விடயங்களில் காத்திரமாகச் சில வேலைகளைச் செய்யும் சிலரும் இல்லாமல் இல்லை.

இத்தகைய விடயங்களில் 'போராட்டம்' என்ற கயிற்றை மக்களிடம் விழுங்கக் கொடுப்பதை விடுத்து, தாம் எடுத்த முடிவைக் காத்திரமாக நகர்த்தும் சில தமிழ்த் தலைவர்கள் இருந்தாலும், அவர்களை நான் ஒவ்வொருவராகப் பெயர் குறிப்பிடப் போவதில்லை. வாசகர்களின் ஊகத்துக்கும் முடிவுக்கும் அவ்விடயத்தை விட்டு விடுகிறேன்.

நீதிமன்றங்களிலும், வெளியிலும் இவ்விடயங்களை ஒட்டி சத்தம் சந்தடியின்றி சளைக்காமல் பணியாற்றும் ஓரிருவரைக் கண்டு நான் மலைத்திருக்கிறேன்.

மக்களைச் சந்தியில் நிறுத்திப் போராட்டம் நடத்துகின்றேன் என்று பந்தா பண்ணாமல் – இல்லாவிட்டால் போராட்ட முஸ்தீபு அறிக்கைகளை அடிக்கடி வெளியிட்டு நடிக்காமல் – மக்களும் ஊடகத் தரப்பினரும் ஏற்கின்றார்களோ, இல்லையோ தன் மனதில் பட்டவற்றை, அவற்றின் விளைவுகள் என்னவென்றே சிந்திக்காமல், வெளிப்படையாகப் பட்டவர்த்தனமாகப் பேசியபடி – சளைக்காமல் காரியமாற்றும் ஓரிருவர் நம் மத்தியில் உள்ளனர். அவர்களைக் கண்டு நான் வியப்பதுண்டு.

ஆனால், இந்த வகையில் சேராமல் தன் வாயால் – அறிக்கைகளால் – அரசியல் செய்கின்றாரே இவர் என நான் கருதிய ஒருவரின் செயல் திறமை கண்டு வியந்து இந்தக் குறிப்பை எழுதுகிறேன்.

அவர் வேறு யாருமல்லர். யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தான்.

*'வாயிருந்தால் வங்காளமும் போய் வரலாம்'* – என்பார்கள். அப்படி ஒரு திறமையை வைத்துக் கொண்டு இவர் நல்ல அரசியல் கோட்டை கட்டுகிறார் என்பதுதான் எனது கணிப்பீடாக இருந்து வந்தது.

மண்டைதீவில் பாரிய மனிதப் புதைகுழி இருக்கின்றது என்றும், அதைத் தோண்டினால் பல அதிர்ச்சிகரமான உண்மைகள் வெளிவரும் என்றும் நாடாளுமன்றத்தில் அவர் உரையாற்றிய போது அவரின் வழமையான வாய்ப்பந்தல் அரசியலில் இதுவும் ஒரு ஸ்டண்ட் என்று எண்ணி என் மனதுக்குள் சிரித்துக்கொண்டேன்.

ஆனால், அந்த மனிதர் மிக ஆழமான ஆள் போலும். காரியகாரன். கருமமே கண்ணாயிருக்கின்றார்.

அப்படி அவர் நாடாளுமன்றத்தில் பேசிய போது மேலதிக விவரங்களை வழங்கும் பட்சத்தில் தான் அந்தப் புதைகுழிகளைத் தோண்டி உண்மைகளைக் கண்டறிய நடவடிக்கை எடுப்பார் என நாடாளுமன்றதில் அவருக்கு அமைச்சர் மனோ கணேசன் பதிலளித்தார்.' அத்தோடு அவரின் வாய்ப்பந்தல் ஓய்ந்து விடும் என நினைத்தேன். ஆனால் அந்த மனிதர் அடங்கவில்லை.

மண்டைதீவு – அல்லைப்பிட்டி – மண்கும்பான் ஆகிய இடங்களில் இருந்து 1990 ஓகஸ்ட் 25 ஆம் திகதிக்கும் செப்டெம்பர் 23 ஆம் திகதிக்கும் இடையில் காணாமலாக்கப்பட்ட 84 இளைஞர்களின் விவரங்கள் மற்றும் முக்கிய தகவல்கள் அடங்கிய ஆய்வறிக்கை ஒன்று 2005 இல் – புலிகளின் காலத்தில – அச்சம்பவங்கள் இடம்பெற்று 15 வருடங்கள் கழித்து வெளியிடப்பட்டிருந்தது.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் என்ற மூன்று இடங்களின் முதல் எழுததுக்களையும் சேர்த்து அது MAM அறிக்கை எனப்பட்டது.

'மண்ணில் கால் தடங்கள் – MAM அறிக்கை' என்ற பெயரில் அமைந்த அந்த ஆய்வறிக்கையில் தொடங்கி பல விடயங்களையும் ஆவணங்களையும் விலாவரியாகச் சமர்ப்பித்து, அந்த மனிதப் புதைகுழிகளைத் தேடி அகழத் தயாரா என்று ஜனாதிபதிக்கும், அமைச்சர் மனோ கணேசனுக்கும் சவால் விடும் வகையில் இப்போது கடிதம் எழுதி விட்டுப் பதிலுக்குக் காத்திருக்கின்றார் சிறிதரன் எம்.பி..

வெளிவேஷத்துக்கு வாய்ப்பந்தல் இருந்தாலும் மனிதன் உண்மையில் செயல்வீரன்தான். விடாமல் மனோகணேசனுக்குப் பந்து வீசியிருக்கின்றார். மனோ கணேசன் அந்தப் பந்துக்கு எப்படி பதிலாட்டம் காட்டப் போகின்றார்? அறிய ஆவல்.

-மின்னல்-

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பல நிகழ்வுகளில் பங்குபற்றுகின்றார்.

நேற்று மாலை அவர் வந்து சேர்ந்ததும் 'காலைக்கதிர்' ஆசிரியர் மற்றும் 'டான்' நிர்வாகி ஆகியோரைச் சந்தித்து பயனுள்ள கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

வடக்கு மக்களுடன் பொருளாதார, கலாசார, கல்வித் தொடர்பாடல்களை முனைப்புடன் முன்னெடுக்கத் தாங்கள் தயாராக இருக்கின்றனர் என்றும் –

அது குறித்து ஆரம்பக் களத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கமாகவே தாங்கள் யாழ். வந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்று மதியம் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனைச் சந்தித்துக் கலந்துரையாடும் சீனத் தூதுவர், பிற ஊடகங்கள் சிலவற்றுக்கும் செல்வார். குருநகரில் கடலுணவு பதனிடும் நிலையம் ஒன்று தொடர்பான பூர்வாங்க ஆய்வுகளிலும் அவருடன் வந்துள்ள குழுவினர் ஈடுபடுவர்.

சீனத் தூதுவருடன், சீனத் தூதரகத்தின் பேச்சாளரும் அரசியல்பிரிவுப் பொறுப்பாளருமான லுவோ சொங், பொருளாதார வர்த்தக கவுன்ஸிலர் யாங் சுவோ யுவான், சின்யுவா செய்தி ஏஜென்ஸியின் கொழும்புப் பிரிவுப் பொறுப்பாளர் தங் லு ஆகியோரும் வருகை தந்துள்ளனர்.

வடக்கில் சீனத் தூதரகத்தின் செயற்பாடுகள் இனி முழு அளவில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

அவர்கள் வீட்டை வாங்க ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான சலுகைக் கடன்கள் வழங்கப்படும். 6 சதவீத வட்டியுடன் 25 ஆண்டுகளில் அது மீளச்செலுத்தப்பட வேண் டும் என்று நிதி அமைச்சர் மங்கள சமவீர அறிவித்தார். (ஐ)

# யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் விளையாட்டு விழா

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை வருடாந்த 'செயற்பட்டு மகிழ்வோம்' விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் நாளை வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையின் ஞானகாந்தன் மைதானத்தில் அதிபர் என். மகேந்திரராஜா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய கல்வி நிர்வாகபிரதிப்பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி ரவிச்சந்திரன் சங்கமித்திரா வழங்குவார். (உ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

பட்ஜெட் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2019 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டமானது பொறுப்புணர்ச்சியுடன் செய்யப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு – கிழக்கு அபிவிருத்திக்கு விசேடமாக 500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இதனைச் சரியான முறையில் எடுத்துச் செயற்படுத்தினால், மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது மட்டுமன்றி, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்களையும் அதிகரிக்க முடியும்.

அமைச்சர் மங்கள சமரவீர முன்வைத்த இந்தத் திட்டங்கள் வரவேற்கத்தக்கவை–என்றார். (ஐ)

# நுண் நிதி நிறுவனங்களுக்கு எதிராக 8 ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டம்

## 3 மாவட்டங்களில் நடத்த ஏற்பாடு



வவுனியா, மார்ச் 06

**நுண்நிதி நிறுவனங்களின் செயற்பாட்டால் பெண்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றமையைக் கண்டித்தும், நுண்நிதி நிறுவனங்களின் பிடியில் சிக்கியுள்ள பெண் களை அரசு மீட்க வேண்டியும் உழைக்கும் பெண்கள் முன்னணியினால் எதிர்வரும் 8ஆம் திகதி மாபெரும் போராட்டம் ஒன்று வவுனியாவில் நடத்தப்படவுள்ளது.**

வவுனியா, மட்டக்களப்பு, பொலனறுவை மாவட்டங்களில் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உழைக்கும் பெண்கள் முன்னணிப் பிரதிநிதிகள் கருத்து வெளியிடுகையில்-

நுண்நிதி நிறுவனங்களுக்கு எதிராக நாம் பல போராட்டங்களை நடத்தியிருந்தோம். எனினும் இதுவரை ஏதுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. ஒரு சில பெண்களின் ஒரு லட்சத்துக்குட்பட்ட கடன்கள் மாத்திரம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. ஏனைய கடனைப் பற்றிய அறிவுறுத்தல்களும் எங்கள் கிராமங்களில் உள்ள பெண்களுக்கு வழங்கப்படவில்லை.


வடக்கு மாகாணத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் உள்ள பெண்களைக் குழுவாகத் தயார் செய்து அவர்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது. அவர்களது வருமானம் பற்றி எந்தவிதமான ஆய்வும் இன்றிக் கடன்கள் வழங்கப்படுகின்றது.

பெண்கள் ஒரு வங்கியில் எடுத்த கடனைக் கட்டமுடியாமல் இருக்கும்போது மற்றைய வங்கியில் கடனைப் பெறுகின்ற நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு கடனைக் கட்டமுடியாத பெண்கள் பலர் சீரழியும் நிலை காணப்படுகின்றது. பிள்ளைகளுக்குச் சரியான உணவு வழங்கப்படுவதில்லை. பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஒழுங்கான முறையில் அனுப்புவதில்லை .

இவ்வாறான நிலையில் எதிர்வரும் 8 ஆம் திகதி அனைதுலக பெண்கள் தினத்தில் பெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்த நாம் தீர்மானித்துள்ளோம். வவுனியா பிரதேச செயலகத்துக்கு முன்பாகவும் மட்டக்களப்பிலும், பொலனறுவையிலும் இந்தப் போராட்டம் சம நேரத்தில் இடம்பெறும்-என்றனர். (ஐ-100)

## மன்னாரில் மதங்களுக்கிடையே குரோதம் தூண்டும் பிரசுரங்கள்!




மன்னார், மார்ச் 06

மன்னாரில் கத்தோலிக்கர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையில் முரண்பாட்டைத் தூண்டும் வகையில், எச்சரிக்கைத் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் இரவு மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் மஹாசிவராத்திரியின்போது துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கான நுழைவுப் பகுதிக்குப் புதிதாக வரவேற்பு வளைவு அமைப்பது தொடர்பாகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை முரண்பாடு இடம்பெற்றது. இந்த நிலையிலே குறித்த துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதிகளவிலான எழுத்துப் பிழைகளுடன், கத்தோலிக்க, இந்து மதங்களைச் சேர்ந்த மக்கள் மத்தியில் குரோதத்தைத் தூண்டிவிடும் வகையில் இந்தத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ஐ)

## 'ஆவா 001 இராஜ்ஜியம்' குறித்து பொலிஸார் தீவிர விசாரணை!



யாழ்ப்பாணம், மார்ச் 06

செம்மணி மற்றும் அதனை அண்டிய பகுதியிலுள்ள வீதிகளில் 'ஆவா 001 இராஜ்ஜியம்' என எழுதப்பட்டுள்ளமை மக்களிடத்தில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இந்தப் பதத்தை எழுதிய பின்னணியில் விபரீதம் ஏதும் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கலாமென்ற கோணத்தில் பொலிஸார் தீவிர விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ஆவா குழு வாள்வெட்டுச் சம்பவங்களில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதாகப் பொலிஸார் கூறி வருகின்றனர்.

வாள்வெட்டுக்களில் ஈடுபட்டு வந்தவர்கள் எனவும் ஆவா குழுவை சேர்ந்தவர்கள் எனவும் சந்தேகத்தின் பேரில் பொலிஸார் பல இளைஞர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளனர். அவர்களுக்கு எதிராக வழக்கு விசாரணைகள் தற்போதும் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் செம்மணியை அண்டிய வீதிகளில் 'ஆவா 001 இராஜ்ஜியம்' என எழுதப்பட்டுள்ளமை குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(ஐ-07)

## 50 கோடி ரூபா பெறுமதியான வைரக்கல்லுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச் 06

பாணந்துறை, கெசல்வத்த பகுதியில் 50 கோடி ரூபா பெறுமதியான வைரக்கல்லுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த வைரக் கல் பன்னிப்பிட்டியில் கொள்ளையிடப்பட்ட வைர கல்லாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (ஐ)

## யானை தாக்கி முதியவர் திருமலையில் மரணம்

திருமலை, மார்ச் 06

திருகோணமலை – முதலியார்குளம் பகுதியில் நேற்றுக் காலை யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை – இலிங்கநகர் பகுதியைச்சேர்ந்த கண்மணிசிறிஸ்கந்தராஜா (74 வயது) என்பவரே உயிரிழந்தார் என தெரியவருகிறது.

இவர் முதலியார்குளம் பகுதியில் வயல் காவலில் ஈடுபட்டு வந்தபோது யானையின் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

எனினும் வைத்தியசாலைக்குச் செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்துவிட்டார் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கண்ணிவெடி அகற்றலுக்கு 6 கோடி குரோன்கள்

## வழங்குகின்றது நோர்வே அரசு



கொழும்பு, மார்ச் 06

இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு மூன்று வருட காலப் பகுதிக்குள் 6 கோடி குரோன்களை நோர்வே அரசு வழங்கத் தீர்மானித்துள்ளதாக அந்த நாட்டு வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மேரியன் ஹேகன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு நேற்று வருகை தந்துள்ள மேரியன் ஹேகன், பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவை சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டபோதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்தகாலங்களில் இலங்கை கண்ணிவெடிகளால் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் தற்போது கண்ணிவெடி அற்ற நாடாக திகழும் நிலையை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்துள்ளது.

அந்தவகையில் இந்த ஆண்டைக் கண்ணிவெடி தடுப்பு ஆண்டாக நோர்வே பிரகடனம் செய்துள்ளதுடன், இந்த முக்கி யத்துவம் வாய்ந்த இலக்கை அடைவதற்கு இலங்கைக்கு வேண்டிய உதவிகளை வழங்க நோர்வே முன்வந்துள்ளது.

நல்லெண்ணச் செயற்பாடுகளில் கண்ணிவெடி அகற்றல் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாகும். இதனூடாக, யுத்த காலப் பகுதியில் பலவந்தமாகத் தமது பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்கள் தமது பிரதேசங்களுக்கு மீண்டும் பாதுகாப்பாகத் திரும்பக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

1997 ஆம் ஆண்டு ஒஸ்லோவில் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடி தடை பிரகடனத்தின் பிரகாரம் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்குப் பங்களிப்பு வழங்குவது நோர்வேயின் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

2018 இல், 18 நாடுகளில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளுக்கு 325 மில்லியன் குரோன்களை அரசு வழங்கியிருந்தது. 2019 ஆம் ஆண்டிலும் இதே அளவு நிதி உதவிகள் வழங்கப்படும்-என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## காணாமலாக்கப்பட்டோர் பணியகம்

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான செயலகம் தேவையா, தேவையற்றதா? அதை ஏற்பதா அல்லது புறக்கணிப்பதா? - என்ற சர்ச்சை தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பது அவதானிக்கத்தக்கது.

அதுவும், காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் கோரிக்கையை வலியுறுத்தும் விதத்தில் கடந்த 25 ஆம் திகதி வடக்கில் இடம்பெற்ற கடையடைப்பு தினத்தில், கிளிநொச்சியில் நடந்த பேரணியில் இவ்விவகாரத்தை ஒட்டி எதிரும் புதிருமான கருத்துக்கள் எழுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நம்பிக்கை அளிக்கும் விதத்தில் - அவர்களின் நியாயமான ஆதங்கங்களை புரிந்து கொள்ளும் வகையில் - இந்த அலுவலகத்தின் செயற்பாடுகளும் போக்குகளும் இருக்குமாயின் அந்த அலுவலகத்தை நம்பி அந்த மக்கள் இறங்குவது குறித்துச் சிந்திக்கலாம்.

பெரும் எண்ணிக்கையில் - பல்லாயிரக்கணக்கில் - வலிந்து காணாமலாக்கப்பட்டோர் வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்கள் தாம்.

ஆனால், காணாமலாக்கப்பட்டோர் செயலகம் தனது முதலாவது கிளை அலுவலகத்தை மாத்தறையில் போய் திறந்து வைத்திருக்கின்றது.

இப்படி ஆரம்ப சமிக்ஞையே நல்ல சகுனமாக இல்லாத போது இந்த அலுவலகம் தொடர்பாகப் பல்வேறு குறைபாடுகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

★ இந்த அலுவலகத்துக்கு எந்த நீதித்துறை அதிகாரமும் கிடையாது.

★ இந்த அலுவலகம் கண்டுபிடிக்கும் விடயங்களை வைத்து எந்த ஒரு குற்றவியல் நடவடிக்கையோ, சிவில் நடவடிக்கையோ ஆரம்பிக்கப்பட முடியாது.

★ இது ஒரு சுயாதீன அமைப்பு அல்ல. யுத்தக் குற்றங்கள் புரிந்த படையினரை நீதி விசாரணைக்கு முன் நிறுத்தவே மாட்டேன் என அடம்பிடிக்கும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவோரே இந்த அலுலகத்தின் தலைவராகவும் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

★ யுத்தக் குற்றம் புரிந்த இராணுவத்துக்கு சார்பாக - அரசுக்காக - ஜெனீவா அமர்வு வரை சென்று, யுத்தக் குற்றங்கள் நடக்கவேயில்லை என்று வாதாடிய இராணுவ அதிகாரியும் இந்த உறுப்பினர்களுள் ஒருவர்.

★ காணாமலாக்கப்பட்டோருக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல், பாதிப்புற்ற குடும்பங்களுக்கு பொருளாதார வசதி செய்து கொடுத்தல் போன்றவை குறித்தே இந்த அலுவலகம் அதிகம் அலட்டிக் கொள்கின்றது.

★ யுத்தக் குற்றங்கள் இழைத்த தரப்புகளை குறைந்த பட்சம் அழைத்து விசாரணை செய்யும் அதிகாரம் கூட இந்த அலுவலகத்துக்கு உண்டா என்பது கேள்விக்குறியே.

★ அரசு இந்த அலுவலகத்துக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. நீண்ட காலம் அது உறங்கு நிலையில்தான் இழுபடுகின்றது.

★ காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் தமது பணியகம் சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையில் கூறப்பட்ட பரிந்துரைகளைக் கூட அரசு செயற்படுத்தாமை குறித்து அதன் தலைவரே விசனம் தெரிவித்திருக்கின்றார்.

★ கடத்தல்கள் மற்றும் காணாமலாக்கச் செய்தல் போன்ற குற்றங்களுடன் தொடர்புபட்ட சந்தேகநபர்கள் எனத் தாம் பெயரிட்ட அரச அதிகாரிகளைப் பணியில் இருந்து இடைநிறுத்துவது தொடர்பான பரிந்துரையைக் கூட அரசு நடைமுறைப்படுத்தவில்லை என்று அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

★ ஒரு நாடு என்ற வகையில் உண்மை, நீதியை நிலைநிறுத்தல், காணாமல்போனோரின் குடும்பங்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தல் தமது கடமை என்பதை அவற்றை நிறைவு செய்ய முடியாத விசனத்துடன் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இவற்றை நோக்கும் போது -

இந்தக் காணாமலாக்கப்பட்டோருக்கான செயலகம், காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் பொறுப்புக் கூறல், நீதியை நிலை நாட்டல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களில் நம்பத் தகுந்த செயற்பாடுகளை ஆற்றக் கூடிய தகுதி நிலையில் இல்லை என்றே படுகின்றது.

எனினும் இழப்பீடுகளை வழங்கல் விடயத்தில் அது காத்திரமாக ஏதேனும் செய்யக் கூடும்.

என்றாலும், இந்த அலுவலகத்தை நிராகரித்தால், மாற்றீடாக நாம் எதனைப் பெறமுடியும், காணாலாக்கப்பட்டோர் விடயத்தைக் கையாள்வதற்கு நாம் பின்பற்றக்கூடிய வழிமுறை யாது என்ற மாற்றீடு பற்றிய கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது.

மறுபுறத்தில், அதை நம்பி ஏற்றுக் கொண்டால், யுத்தக் குற்ற விடயங்களில் பொறுப்புக் கூறல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் போன்ற அம்சங்களை இந்த அலுவலகச் செயற்பாடு மூலம் இலங்கை அரசு புறந்தள்ளி, வெற்றிகரமாகக் காய் நகர்த்திச் செல்ல உதவுவதாக அது அமைந்து விடுமோ என்ற கேள்வியும் எழுகின்றது.

இந்த இரண்டுக்கும் நடுவில் யதார்த்தப் புறச் சூழலை நன்கு ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய இக்கட்டில் தமிழர்கள் உள்ளனர். அதுதான் நிஜ நிலைமை.

# பட்ஜெட் குறித்து தீவிரமாக ஆராய்ந்த பின்னரே முடிவு

## கூறுகின்றார் செல்வம் எம்.பி.



கொழும்பு, மார்ச் 06

வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்த பின்னரே, அதற்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பது தொடர்பாகத் தீர்மானிக்கப்படும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நேற்று சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் மற்றும் பொருளாதார தளம்பல் நிலை என்பவற்றின் அடிப்படையில் புதிய வரவு - செலவுத் திட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. (ஜ)

# சூது விளையாட்டில் ஈடுபட்ட ஐந்து பேர் பணத்துடன் கைது

வவுனியா, மார்ச் 06

வவுனியா தட்சணாங்குளம் பகுதியிலுள்ள கள்ளுத் தவறணை ஒன்றில் சூது விளையாட்டில் ஈடுபட்ட 5 பேர் ஒரு தொகைப்பணத்துடன் நேற்று முன் தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரிக்குளம் குளக்கட்டு வீதியூடாக தட்சணாங்குளம் செல்லும் குளக்கட்டிலுள்ள கள்ளுத் தவறணையில் நீண்ட காலமாகப் பணம் வைத்து சூது விளையாட்டு இடம்பெற்று வருவதாக வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரம தலைமையின் கீழ் செயற்படும் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்தது.

இதன் அடிப்படையில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப் பிரிவினருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது கள்ளுத் தவறணையில் சூது விளையாட்டில் ஈடுபட்ட 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து சூது விளையாட்டுக்குப் பயன்படுத்திய ஒரு தொகைப் பணமும் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் கூறினர். (ஜ -100)

# மன்னார் சென்ற ரயிலிலிருந்து வீழ்ந்து இளைஞர் படுகாயம்!

வவுனியா, மார்ச் 06

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கிச் சென்ற ரயிலில் இருந்து இளைஞர் ஒருவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2.40 மணிக்கு வவுனியா செட்டிகுளத்தில் இடம் பெற்றது. சம்பவத்தில் படுகாயமடைந்தவர் மடு பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவர் வவுனியா பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் மிதிபலகையில் அமர்ந்தவாறு பயணம் செய்தார் எனவும் தூக்கம் காரணமாகவே தவறி கீழே விழுந்தார் என்றும் முதற்கட்ட விசாரணையில் தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ -100)

# மஹாசிவராத்திரி விரதம் சிறப்பாக அனுஷ்டிப்பு



மஹா சிவராத்திரி விரதம் உலகத்திலுள்ள அனைத்து இந்துக்களினாலும் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கையிலும் இந்துக்கள் வாழும் அனைத்து பகுதிகளிலும் மஹா சிவராத்திரி சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

கொழும்பு, புத்தளம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, பதுளை நுவரெலியா, இரத்தினபுரி, மாத்தளை, கண்டி உள்ளிட்ட பல பகுதிகளில் மஹா சிவராத்திரியை மக்கள் சிறப்பாக நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு அனுஷ்டித்துள்ளனர்.

குறிப்பாக தலைநகர் கொழும்பில் பம்பலப்பிட்டி வஜிர பிள்ளையார் ஆலயம், மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், பொன்னம்பலவாணேஸ்வரம் ஆலயம் உள்ளிட்ட பல ஆலயங்களில் இரவு முழுவதும் விசேட வழிபாடுகள் இடம் பெற்றன.

அத்தோடு, நுவரெலியா ஸ்ரீ லங்காதீஸ்வர ஆலய காயத்திரி பீடத்தில் மஹா சிவராத்திரி நிகழ்வு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி, பாலாபிசேகம், தேன் அபிசேகம், பஞ்சாமிர்த அபிசேகம், சங்காபிசேகம், திரவிய அபிசேகம் உட்பட பல்வேறு அலங்கார அபிசேகங்கள் நடத்தப்பட்டு நான்கு சாமப் பூஜைகளும் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

அதேபோன்று கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலயத்திலும் விசேட பூஜைகள் நடத்தப்பட்டு நான்கு சாம பூஜைகள் இடம்பெற்றுள்ளன.

அதேபோன்று மன்னாரில் திருக்கேதீஸ்வரத்திலும் மஹா சிவராத்திரி சிறப்பாக இடம் பெற்றுள்ளது. வடக்கு, கிழக்கு மற்றும் தென் பகுதிகளில் இருந்தும் மக்கள் வருகை தந்ததோடு, வெளிநாடுகளில் இருந்தும் விசேடமாக பக்தர்கள் வருகை தந்திருந்தனர். (ஜ)

## நாளை

07.03.2019
வியாழக்கிழமை
நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ 8.57 வரை
திதி : பிரதமை மு.இ 11.46 வரை
சுபநேரம் : 7.55 – 9.25 வரை
இராகுகாலம் : 1.55 – 3.25 வரை

# ஜெனீவாவில் இலங்கைப் படைகளை பாதுகாக்க நடவடிக்கைகள் அவசியம்

## அரசிடம் கோருகின்றார் ஜி.எ. பீரிஸ்



கொழும்பு, மார்ச் 06

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைப் படையினரைப் பாதுகாக்க, அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – இராணுவத்தைப் பாதுகாக்க இலங்கை அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்களை முன்னிலைப்படுத்துவதில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை.

அரசு இப்போது முற்றிலும் மௌன மாக இருக்கிறது. போர்க்குற்றச்சாட்டுகளில் இருந்து இராணுவத்தினரைப் பாதுகாக்க இன்னும் தீவிரமாகச் செயற்படவேண்டும்.

நாட்டின் அமைதியைக் கொண்டு வர பெரிய தியாகங்களைச் செய்த படையி னரின் நற்பெயரைப் பாதுகாக்கக் கடமை யாகப் பணியாற்ற வேண்டும்.

ஆனால் இலங்கை அரசு, எமது இரா ணுவத்தைவிமர்சிப்பவர்களுடன்இணைந்து நிற்கிறது. அரசின் முதன்மையான பொறுப் பைக் கைவிட்டு, அமைதியாக இருக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலில், இலங்கை விவகாரம் எழுகின்ற போதெல் லாம், அங்கு சென்று நாட்டைப் பாது காக்கவேண்டியது அரசின் கடமை.

11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணா மல் ஆக்கப்பட்ட வழக்கில் 11 கடற்படையி னருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளதாக பாதுகாப்புச் செயலர் ஹேம சிறி பெர்னாண்டோ கூறியிருந்தார்.

இது அனைத்துலக அமைப்புகளைச் சமாளிக்கின்ற அரசியல் நிகழ்ச்சி நிரலாக உள்ளது. பாதுகாப்புச் செயலர் தனது ஆணைக்கும் அப்பால் செல்கிறார்.

சாட்சியங்களின் அடிப்படையில் கைது செய்யப்படவேண்டியவரை தீர்மானிப்பது சட்டமா அதிபர் தான். பாதுகாப்புச் செயலர் அல்லர்.

இரட்டை வேடம் போடுவதே, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு அடிப்படைக் காரணம்.

ஒரு பக்கத்தில் எமது போர் வீரர்களைத் தண்டிக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கிறது. இன்னொரு பக்கம், சிறுவர் களுக்கு கழுத்தில் சயனைட் அணிவித்த அடேல் பாலசிங்கம் சுதந்திரமாக இருக்க அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டது – என்றார். (ஐ)

# போதை கடத்தலைத் தடுக்க 70 மோப்ப நாய்கள் களத்தில்!

### விமான நிலையத்திலும் துறைமுகத்திலும் விசேட பிரிவு

கொழும்பு, மார்ச் 06

போதைப்பொருள் கடத்தல் களை முறியடிக்கும் நோக்கில், கட்டு நாயக்க விமான நிலையம் மற்றும் கொழும்புத் துறைமுகம் ஆகிய இடங்களில் பொலிஸ் மோப்ப நாய் களின் இரண்டு பிரிவுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளனவென பொலிஸ் மோப்ப நாய்கள் நடவடிக்கைப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொக்கெய்ன், ஹெரோயின் ஆகிய போதைப் பொருள் கடத்தல் களை சுற்றிவளைக்கும் நடவடிக்கை களுக்காகவே, இந்த மோப்ப நாய் கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளன என வும், இதற்காக 70 பொலிஸ் மோப்ப நாய்கள் தயார் நிலையில் வைக் கப்பட்டுள்ளன எனவும் அந்தப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

பொலிஸ் மோப்ப நாய்கள் பிரி வில் 222 நாய்கள் காணப்படுகின்ற மையுடன் அவற்றில் 70 நாய்களே போதைப் பொருள் கடத்தல்களைச் சுற்றிவளைப்பதற்காகப் பயிற்று விக்கப்பட்டுள்ளன. இவற்றில் 60 நாய்கள் வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, விசேட பயிற்சிகள் வழங்கப்பட் டுள்ளன.

இதன்மூலம், இரகசியமாக நாட்டுக்குள் கொண்டுவரப்படும் போதைப் பொருளைக் கைப்பற்ற முடியும் என மோப்ப நாய்கள் நடவ டிக்கைப் பிரிவுப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இது தவிர விரைவில் காலி மற் றும் அம்பாந்தோட்டை துறைமுகங் களிலும், மத்தள விமான நிலையத் திலும் பொலிஸ் மோப்ப நாய்களின் மூன்று பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட வுள்ளமையுடன், எதிர்வரும் காலங்க ளில் போதை வில்லைகளைக் கைப்பற்றுவதற்காக அந்த நாய்க ளுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன எனவும் பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

# திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் இன்று

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப் படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளா கிய இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இல17, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள திருமறைக் கலாமன்றத்தின் 'கலைஞான சுரபி தியான' இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.கொழும்புத்துறை அமலம ரித்தியாகிகளின் டி மசெனாற் இறையியலக அதிபர் அருள்பணி சூ.டேமியன் அடிகள் கலந்துகொண்டு இவ் ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்கள் உட் பட ஏனைய துறைசார்ந்த பிரிவுகளுக்கான பிரதி களை வழங்கவுள்ளார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப் பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும் இம்முறை புதிதாக இணைந்து பங்குபற்ற விருப்பமுடையவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

திருப்பாடுகளின் நாடகம் ஏப்ரல் 11ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு 'அன்பில் மலர்ந்த அமர காவியம்' என்னும் பெயரில் யாழ்.திருமறைக் கலா மன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. 'அன் பில் மலர்ந்த அமர காவியம்' திருப்பாடுகளின் நாட கம் இறுதியாக 2015ஆம் ஆண்டு மேடையேற்றப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உசன் கந்தசாமி கோயிலில் ஞாயிறன்று ஹோம பெருவிழா

மிருசுவில், மார்ச் 06

மிருசுவில், உசன் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மூலமந்திர சுபயக்ஞ ஸ்கந்த ஹோம பெருவிழா நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் யாகபூசை, ஸ்கந்த ஹோமம், தாரா ஹோமம், உபசார ஹோமம், மஹாபூர்ணாதி, கும்பங்கள் வீதியுலா, சங்காபிஷேகம் நடைபெறும். மதியம் 12 மணிக்கு சண்முக அர்ச்சனை, மங்கள வீதியுலா, அருளுரை, ஆசியுரை, பிரசாதம் வழங்கலைத் தொடர்ந்து மதியம் 1.00 மணிக்கு அன்னதானம் நடைபெறும்.

உசன் கந்தசாமி கோயில் பிரதமகுரு 'அருள்வாக்குச் சித்தர்' குகஸ்ரீ இரத்தின கேதீஸ்வர சுவாமிகள் தலைமையில் பல சிவாச் சாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள். (இ)

# சுகாதாரத் துறைக்கு ஜப்பான் 2000 கோடி ரூபா நன்கொடை

கொழும்பு, மார்ச் 06


இலங்கையின் சுகாதாரத் துறையை முன்னேற்றுவதற்கு, 2000 கோடி ரூபா கொடையை வழங்குவதற்கு ஜப்பானிய அரசு முன் வந்துள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகிரா சுகியாமா இந்தத் தகவலை வெளியிட் டுள்ளார்.

ஜப்பான் அனைத்துலக ஒத்துழைப்பு முகவரகம் ஊடாக இந்த நிதி வழங்கப்படும் என்றும் ஜப்பானியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு 2020இற்கு முன்னதாக அறுவைச் சிகிச்சைக் கூடம் ஒன்றை வழங்க ஜப்பான் முடிவு செய்துள்ளது என்றும், இலங் கையின் சுகாதார துறையை வலுப்படுத்த ஜப்பான் தொடர்ந்து ஆத ரவு வழங்கும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார். (ஐ)

# மின்தடை



யாழ்ப்பாணம், மார்ச் 06

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை களுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை –

**யாழ் பிரதேசத்தில் -**

வெற்றிலைக்கேணி, வெற்றி லைக்கேணி இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

குமுழமுனை, முழங்காவில், நாச் சிக்குடா, வெள்ளாங்குளம், ஜெயபுரம், வேரவில், வலைப்பாடு, ஆனைவிழுந் தான் அக்கராயன், 651வது படைப் பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் மொகமட் ஐஸ் தொழிற்சாலை, 652வது படைப்பிரிவு முகாம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில் -**

பட்டாணிச்சூர் கிராமம், ஆண்டியப் புளியங்குளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில் -**

நானாட்டான் ஆகிய பிரதேசங்க ளிலும் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று மின்பொறியிய லாளர் அறிவித்துள்ளார்.

# சிகரெட் பாவனையை ஊக்குவிக்கும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 06

சிகரெட், மதுபானம் போன்றவற்றின் பிரசாரங்களுக்கு ஊக்கமளிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, புகையிலை மற்றும் மதுபானம் தொடர் பிலான தேசிய அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் பாலித்த அபயக்கோன் தெரிவித்தார்.

இவ்வாறான சில நாடகங்களும் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன. இதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சட்ட மா அதிபரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆலோச னைக்கு அமைய இவ்வாறான நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

சிகரெட், மதுபானப் பாவனைகளை ஒழிப்பது தொடர்பி லான செயலமர்வின்போதே பேராசிரியர் பாலித்த அபயக் கோன் மேற்கண்டவாறு உரையாற்றினார்.


புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பிலான தேசிய அதிகார சபை 2011 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்த சட்டத் தினால் மதுபானங்களுக்கும், சிகரெட்டுகளுக்கும் அடிமை யானவர்களின் எண்ணிக்கை, தற்சமயம் 15 சத வீதம் வரை குறைவடைந்திருக்கிறது.

எனினும், 85 சதவீதமானோரை இதிலிருந்து மீட்கமுடிந் திருப்பதாகவும் பேராசிரியர் பாலித்த அபயக்கோன் இதன் போது குறிப்பிட்டார்.

கலையை ஊடகமாகப் பயன்படுத்தி சிகரெட், மதுபானம் போன்ற பாவனைகளிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க, அனைத்து பெற்றோர்களும் முன் வரவேண்டும்.

இவ்வாறு, இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரை நிகழ்த் திய டாக்டர் உப்பில் ஜயசேகர வலியுறுத்திக் கேட்டுக்கொண் டார். (ஐ)

# அமெ. தயாரிப்பு 'எவ் - 16' விமானத்தை சுட்டு வீழ்த்திய முதல் வீரர் அபிநந்தனாம்



புதுடில்லி,மார்ச்06

அமெரிக்காவின் தயாரிப்பான எவ் – 16 ரக போர் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய முதல் இந்திய விமானி மற்றும் உலகிலேயே முதல் வீரர் எனும் பெருமையை அபிநந்தன் வர்த்தமான் பெற்றுள்ளார்.

புல்வாமா தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக இந்திய விமானப் படை பாகிஸ்தானின் பாலகோட் பகுதியில் தீவிரவாத முகாம்களை குண்டுவீசி அழித்துவிட்டு கடந்த மாதம் 26 ஆம் திகதி திரும்பியது. இதையடுத்து, இந்திய வான்வெளிக்குள் பாகிஸ்தான் போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்தன. பாகிஸ்தான் விமானப்படை அமெரிக்கா அளித்த எவ் - 16 ரகப் போர் விமானங்களைப் பயன்படுத்தி இந்திய வான்வெளிக்குள் நுழைந்தன.

இந்த விமானங்களைத் தீவிரவாதிகளை அழிக்க மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் அமெரிக்கா அவற்றைப் பாகிஸ்தானுக்கு வழங்கியுள்ள நிலையில் இந்த விமானத்தை இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தான் பயன்படுத்தியுள்ளது. இது தொடர்பாக ஆதாரங்களைத் திரட்டி அமெரிக்கா விசாரணையும் நடத்த உள்ளது.

இந்த எவ் – 16 ரக போர் விமானத்தை மிக் – 21 பைஸன் ரக போர் விமானத்தின் மூலம் இந்திய விமானி அபிநந்தன் வர்த்தமான் விரட்டிச் சென்றார். ஜம்மு காஷ்மீர் மாநிலம், ரஜவுரி வான் பகுதியில் பாகிஸ்தான் போர் விமானங்களை அபிநந்தன் இடைமறித்தார். அப்போது அந்தப் பாகிஸ்தான் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய அபிநந்தன் பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் சென்றபோது, அந்நாட்டு விமானப்படையினர் அபிநந்தன் விமானத்தைச் சுட்டனர். இதில் அவர் பாரசூட் மூலம் குதித்து உயிர் தப்பினார். ஏறக்குறைய 60 மணிநேரத்துக்கும் மேலாகப் பாகிஸ்தான்ராணுவத்தின் பிடியிலிருந்து அதன் பின் இந்திய அதிகாரிகளிடம் அபிநந்தன் ஒப்படைக்கப்பட்டார்.

அபிநந்தன் சுட்டு வீழ்த்திய எவ் - 16 விமானம் குறித்து விமானப்படை அதிகாரிகள் கூறியவை வருமாறு: -

பாகிஸ்தான் விமானப்படையின் எவ் – 16 விமானத்தை அபிநந்தன் சுட்டு வீழ்த்தியமை பெரும் வியப்புக்குள்ளாக்கியது. ஏனென்றால், அமெரிக்கத் தயாரிப்பான எவ் –16 ரக போர் விமானம் அதிநவீன தொழில்நுட்பம் கொண்டது. இது வரை அந்த விமானத்தை யாரும் சுட்டு வீழ்த்தியமை இல்லை.

ஆனால், 20 ஆண்டுகளுக்கு முந்தைய ரஷ்ய தயாரிப்பான மிக் –21 பைஸன் ரக விமானத்தின் மூலம் எவ் –16 ரக விமானத்தை அபிநந்தன் சுட்டு வீழ்த்தியமைதான் ஆச்சரியத்துக்குரிய தாகும். . இதன்மூலம் எவ் – 16 போர் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

பாகிஸ்தானின் எவ் –16 ரக விமானத்தைச் சுட்டு வீழ்த்துவதற்கு அபிநந்தன், வியம்பல் ஆர் - 73 எனும் ஏவுகணையைப் பயன்படுத்தியுள்ளார். இந்த ஏவுகணையைப் பயன்படுத்தும் முன் கடைசியாக ஆர் –73 எனும் செய்தியை விமானப்படை கட்டுப்பாட்டு அறைக்கு அபிநந்தன் அனுப்பியுள்ளார். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

– இந்தத் தகவலை ஆங்கில நாளேடு ஒன்றுக்கு முன்னாள் விமானப்படைத் தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே அபிநந்தனை இந்தியாவிடம் ஒப்படைக்கும் முன் அவரிடம் இருந்த ஆவணங்கள், பொருள்கள் அனைத்தையும் அளித்த பாகிஸ்தான் ராணுவத்தினர், அவரிடம் இருந்த கைத்துப்பாக்கியை மட்டும் தர மறுத்துவிட்டனர் எனக் கூறப்படுகிறது. (உ)

# இந்தியாவுக்கான வர்த்தக முன்னுரிமையை விலக்கிக் கொள்ள அமெரிக்கா தீர்மானம்

## பாரதத்தை கடுமையாக விமர்சிக்கிறார் டிரம்ப்



வொஷிங்டன்,மார்ச்06

இந்தியாவுக்கான வர்த்தக முன்னுரிமை அந்தஸ்தை நீக்க அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முடிவு செய்துள்ளார்.

அமெரிக்கப் பொருள்களுக்கு இந்தியா அதிக வரி விதிப்பதாக, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கடுமையாக விமர்சித்து வருகிறார். அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு இந்தியா 100 சதவீதம் வரை வரி விதிப்பதாகவும், இந்தியாவில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு வரி எதுவும் விதிக்கப்படுவது இல்லை என்றும் டிரம்ப் கூறியிருந்தார்.

ஒரு பொருளுக்கு நாம் எதுவும் வரியாக வசூலிக்காதபோது, எந்த நாடும் அதே பொருளுக்கு 100 சதவீதம் வரி வசூலிப்பதை அமெரிக்கா இனி அனுமதிக்காது என்றும், நாமும் அதற்கு பதில் வரி விதிக்க வேண்டும் என்றும் டிரம்ப் கூறியிருந்தார்.

இந்த நிலையில், இந்தியாவுக்கு வழங்கப்பட்டு இருந்த சிறப்பு வர்த்தக நாடு என்ற அந்தஸ்தை ரத்து செய்ய டிரம்ப் முடிவு செய்துள்ளார். அதேபோல், துருக்கிக்கு வழங்கப்பட்டு இருந்த வர்த்தக சலுகையையும் அமெரிக்கா பறிக்க உள்ளது.

டொனால்ட் டிரம்ப் உத்தரவின் படி, இந்தியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கு வழங்கப்பட்டு வந்த வர்த்தக சலுகைகளை ரத்து செய்ய இருப்பதாக அமெரிக்க வர்த்தக அலுவலகத் தலைமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# கமலின் மக்கள் நீதி மய்யம் கட்சியின் பிரசாரத்துக்கு அர்விந்த் கெஜ்ரிவால்?

வரும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமது மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்ய டில்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவாலை அழைக்க கமல்ஹாசன் திட்டமிட்டுள்ளார்.

மக்களவைத் தேர்தல் திகதி இந்த வாரம் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து கட்சிகளும் கூட்டணி, தொகுதிப் பங்கீட்டை முடித்து பிரசாரத்தை தொடங்க உள்ளன.

அ.தி.மு.க. கூட்டணி சார்பாக சென்னையை அடுத்த வண்டலூரில் இன்று நடக்கும் பிரசசாரப் பொதுக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க உள்ளார்.

தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்ய அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி வரும் 13ஆம் திகதி தமிழகம் வர உள்ளார். அவரைத் தொடர்ந்து, சோனியா காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்ட தேசிய தலைவர்களும் தமிழகம் வர உள்ளனர்.

இந்நிலையில், தங்களுக்கு ஆதரவாக பிரசசாரம் செய்ய டில்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவாலை அழைக்க மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் திட்டமிட்டுள்ளார்.

இது தொடர்பாக, அக்கட்சி நிர்வாகிகள் கூறும்போது –

"ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகளின் பிரச்சாரத்தை எதிர்கொள்ள பல்வேறு வியூகம் வகுக்கப்பட்டு வருகிறது. மக்கள் நீதி மய்யத்துக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய வருமாறு டெல்லி முதல்வர் அர்விந்த் கெஜ்ரிவாலை அழைக்க கமல்



ஹாசன் திட்டமிட்டுள்ளார். மக்கள் நீதி மய்யத்தின் தொடக்க விழாவில் கெஜ்ரிவால் ஆர்வமுடன் பங்கேற்றார். எனவே, தேர்தல் பிரசாரத்துக்கும் அவர் வருவார் என்று நம்புகிறோம். இதேபோல, பல்வேறு பிரபலங்களையும் பிரசாரத்தில் களமிறக்க திட்டமிடப்பட்டுள்ளது" என்றனர்.

# உத்தரப் பிரதேச மாநிலத்தில் முதல்வரின் 'ஜனதா தர்பார்'!

உத்தரப் பிரதேச மாநிலத்தில் 'ஜனதா தர்பார்' மூலம் பொதுமக்கள் தங்கள் குறைகளைத் தாராளமாகத் தம்மிடம் எடுத்துச் சொல்ல முதல்வர் யோகி ஆதித்யநாத் அனுமதிக்கிறார் என் அதிகாரிகள் தெரிவித்தனர்.


உத்தரப் பிரதேச மாநிலத்தில் முதல்வர் யோகி ஆதித்யநாத் பொதுமக்களின் குறைகளைக் கண்டறிந்து அவற்றிற்குத் தீர்வு காண ஜனதா தர்பாரைத் தொடங்கியுள்ளார்.

அவர்கள் தங்களுக்கு ஏற்படும் பல்வேறு விதமான பிரச்சினைகளையும் இதில் அவருடன் பேசுகின்றனர். அவற்றின் தீவிரத் தன்மையைப் பொறுத்து உடனுக்குடன் தீர்வு ஏற்பட அதிகாரிகளை அழைத்து அதற்கான நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டு வருகின்றார் என்று கூறப்படுகிறது.

மகத் கோயிலில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினையொன்றை அவர் முன்னிலையில் கொண்டுவந்தனர். அதனைக் கவனமாக கேட்ட முதல்வர் ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

சந்தன் திரிபாதி என்பவரும் முதல்வரைச் சந்தித்துவிட்டு வந்தார். அவர் கூறுகையில், "எங்கள் பகுதியில் சாலை வசதி மோசமாக இருப்பதை முதல்வரிடம் கூறினேன். மேலும் எங்கள் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் இருப்பதையும் கூறினேன். என்னுடைய பகுதியை விசாரித்தறிந்த முதல்வர் அதற்கான வேலைகள் விரைவில் தொடங்கப்படும் என்று உத்தரவாதம் அளித்துள்ளார்" என்றார்.

முதல்வர் யோகி ஆதித்யநாத்தின் ஜனதா தர்பாருக்கு பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன. (உ)



பொதுமக்கள் குறைகளைக் கேட்டறியும் முதல்வர் யோகி ஆதித்யநாத்.

# அமெ. அலபாமாவில் பயங்கர சூறாவளி 23 பேர் சாவு; மேலும் பலருக்குக் காயம்

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் வீசிய பயங்கர சூறாவளிக் காற்றில் 23 பேர் பலியாகியுள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அதிகாரிகள் - "அமெரிக்காவின் அலபாமா மாகாணத்திலுள்ள கிழக்குப் பகுதியில் வீசிய சூறாவளிக் காற்றில் 23 பேர் பலியாகினர். இவர்களில் குழந்தைகளும், பெண்களும் அடக்கம். பலர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலரது வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. பல்வேறு இடங்களில் மரங்கள் வேருடன் சரிந்துள்ளன" என்றனர்.

இதற்கு முன்னர் இம்மாதிரியான நிலையை எதிர்கொண்டதில்லை என்று அலபாமா பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

சூறாவளி ஏற்பட்ட இடங்களில் மீட்புப் பணிகள் வெளிச்சமின்மை காரணமாக தாமதமாகியுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர். மீட்புப் பணிகள் காரணமாக அப்பகுதிகளில் சாலைப் போக்குவரத்து முடக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சூறாவளியில் பலியானவர்களுக்காக தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார். மேலும் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

(உ)



## அமெ. – வடகொரியப் பேச்சு தொடர சீனா வலியுறுத்தல்

வடகொரியாவும் அமெரிக்காவும் தொடர்ந்து பேச்சுகளில் ஈடுபட வேண்டும் என்று சீனா வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து சீனாவின் வெளியுறவுத் துறை பிரதிநிதி சாங் திங்கட்கிழமை கூறும்போது - "முன்னேற்ற நடவடிக்கையைக் கருத்தில் கொண்டு அமெரிக்காவும் வடகொரியாவும் தொடர்ந்து பேச்சுகளில் ஈடுபட வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். மேலும் இதன் மூலம் கொரிய தீபகற்பத்தில் நிலவும் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்" என்றார்.

வடகொரிய அதிபர் கிம், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கலந்து கொண்ட உச்சி மாநாடு வியட்நாம் தலைநகரம் ஹானோயில் கடந்த வாரம் நடந்தது.

அணு ஆயுத சோதனை மையங்களையும் மூடிவிட வேண்டும் என்ற அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் விருப்பமும், வடகொரியா மீது விதிக்கப்பட்ட அமெரிக்க வர்த்தகத் தடைகள் அனைத்தையும் ட்ரம்ப் நீக்க வேண்டும் என்ற வடகொரிய அதிபர் கிம்மின் விருப்பமும் நிறைவேற்றப்படாமல் இந்தச் சந்திப்பு தோல்வியில் முடிந்தது.

இந்தச் சந்திப்பில் எந்த ஒப்பந்தமும் எட்டப்படவில்லை. ஆனால் இரு நாடுகளின் குழுக்களும் எதிர்காலத்தில் சந்திக்கும் வாய்ப்புகள் உள்ளன என்று இரு நாடுகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கென்யாவில் ஹெலி விழுந்து நொறுங்கியது 4 அமெ. பயணிகள் உட்பட ஐவர் உயிரிழப்பு

நைரோபி, மார்ச் 06

கென்யாவில் ஹெலிக்கொப்டர் ஒன்று விழுந்து நொறுங்கியதில் கென்யாவைச் சேர்ந்த விமானியும், அமெரிக்காவைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் 4 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

கென்யாவின் வடமேற்கு பகுதியில் உள்ள துர்கானா ஏரியின் நடுவில் சிறிய தீவு ஒன்று அமைந்துள்ளது. இந்த தீவில் தேசிய பூங்கா உள்ளது. இந்தப் பூங்காவைச் சுற்றிப்பார்ப்பதற்காக ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். ஹெலிக்கொப்டர்கள் மூலமாக சுற்றுலாப் பயணிகள் பூங்காவுக்கு அழைத்து வரப்படுகிறார்கள்.

இந்நிலையில், நேற்று முன்தினம் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு 2 ஹெலிக்கொப்டர்கள் தேசிய பூங்காவிற்கு வந்தன. அவற்றில் ஒரு ஹெலிக்கொப்டர் தரையிறங்கும்போது, எதிர்பாராதவிதமாக தரையில் விழுந்து நொறுங்கியது.

இந்த கோர விபத்தில் கென்யாவைச் சேர்ந்த விமானியும், அமெரிக்காவைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் 4 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். விபத்துக்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. இது குறித்து விசாரிக்கப்பட்டு வருகிறது.



## சவால்கள் இன்னும் முடியவில்லை பதிலடி தரத் தயாராக இருங்கள்!

### படையினரை உஷார்படுத்துகிறார் பாக். தளபதி

இஸ்லாமாபாத், மார்ச் 06

சவால்கள் இன்னும் முடியவில்லை. பதிலடி தரத் தயாராக இருங்கள் எனத் தனது படையினரைச் சந்தித்த பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி, அவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியா – பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் நிலவி வரும் நிலையில், பாகிஸ்தான் விமானப்படை தளபதி முஜாகித் அன்வர் கான், நேற்றுமுன்தினம் எல்லைப்புறப் படை முகாம்களுக்கு நேரில் சென்றார். அங்கு இராணுவ, விமானப் படை வீரர்களையும், ஊழியர்களையும் சந்தித்துப் பேசினார்.

அவர்களிடையே பேசுகையில் விமானப்படை தளபதி கூறியவை வருமாறு:-

சமீபத்தில் எதிரியுடனான மோதலின்போது, நாட்டின் இறையாண்மையை பாதுகாக்க பாகிஸ்தான் விமானப்படை சிறப்பாக செயல்பட்டது. இதற்காக விமானப்படை குறித்து நாடு பெருமைப்படுகிறது.

சவால்கள் இன்னும் முடியவில்லை. எனவே, படைகளை உஷாராக வைத்திருங்கள். எதிரியிடம் இருந்து ஏதேனும் அத்துமீறல் உருவானால், பதிலடி கொடுக்க தயாராக இருங்கள். - இவ்வாறு அவர் கூறினார்.

## பத்திரிகையாளர் கஷோகியின் உடல் சவுதி தூதரக அதிகாரி வீட்டில் எரிப்பு

### செய்தி நிறுவனம் பரபரப்புத் தகவல்



படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் ஜமால் கஷோகியின் உடல் பாகங்கள் சவுதி தூதரக அதிகாரி இல்லத்தில் எரிக்கப்பட்டுவிட்டன எனச் செய்தி வெளியாகி யுள்ளது.

இது குறித்து ஏ.என்.ஐ. செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், "மத்திய கிழக்கு நாடுகளில் இயங்கும் அல் – ஜஸிராவின் விசாரணையில் சவுதி பத்திரிகையாளர் ஜமாலின் உடல் துருக்கியில் உள்ள சவுதி தூதரக அதிகாரி வீட்டில் எரிக்கப்பட்டன கண்டறியப்பட்டது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கியில் கொல்லப்பட்ட சவுதி பத்திரிகையாளர் ஜமாலின் உடல் குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது என்றும், இறுதியில் உண்மை கண்டறியப்படும் என்றும் சவுதி வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில் மேற்படி தகவலை ஏ. என்.ஐ. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

சவுதி அரசை அமெரிக்கப் பத்திரிகைகளில் காட்டமாக விமர்சித்து வந்த சவுதி பத்திரிகையாளர் ஜமால் துருக்கியில் உள்ள சவுதி தூதரகத்தில் ஒக்டோபர் 2 ஆம் திகதி கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக நடந்த விசாரணையில் சவுதி அரேபியாவின் அதிகாரிகள் திட்டமிட்டு மிருகத்தனமாக ஜமாலைக் கொலை செய்துள்ளனர் என்பது அம்பலமானது. மேலும், துருக்கி அரசு இந்தக் கொலைக் குற்றத்தை விசாரிக்க சவுதி அனுமதி அளிக்காமல் 13 நாள்கள் தாமதப்படுத்தியது என்று ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருந்தது.

ஜமால் கஷோகி கொல்லப்படுவதற்கு முன்னரே சவுதி இளவரசர் முகமது பின் சல்மான், அவரைக் கொல்லத் திட்டமிட்டி ருந்ததார் என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சவுதி தூதர அதிகாரியைக் கொன்ற குற்றவாளி பங்களாதேஷில் தூக்கில்!

பங்களாதேஷில் சவுதி தூதரக உயரதிகாரியைக் கொன்ற வழக்கில் சாய்புல் இஸ்லாம் மா முன் என்பவருக்கு நேற்று முன்தினம் இரவு 10.01 மணி அளவில் பலத்த பாதுகாப்புக்கிடையே தூக்குதண்டனை நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து காஸிப்பூர் மத்திய சிறைச்சாலை உயரதிகாரி ஷாஜஹான் அகமது கூறினார் என பங்களாதேஷின் அதிகாரபூர்வ பி.எஸ்.எஸ். செய்தி நிறுவனம் தெரிவித்துள்ள விவரம் வருமாறு:-

கடந்த 2012 மார்ச் 6 அன்று டாக்காவில் போஷ் குல்ஷான் பகுதியில் வசித்து வந்த சவுதி அரேபியா தூதரகத்தின் உயரதிகாரி காலாஃப் அல் அலி (45), கொலை செய்யப்பட்டார்.

உயிரிழந்த தூதரக அதிகாரியிடம் மாமுன் பணம் கேட்டு மிரட்டினார் எனவும் மிரட்டலுக்குப் பணியாததால் அவரை சுட்டுக் கொல்லும் அளவுக்கு மோதல் ஏற்பட்டதாகவும் விசாரணையின் போது மாமுன் வாக்குமூலம் அளித்தார்.

சம்பவம் நடந்த அதே ஆண்டு 2012 டிசெம்பர் மாதம் டாக்கா நீதிமன்றத்தில் இவ்வழக்கின் விசாரணை வேகமாக நடைபெற்றுத் தீர்ப்பளிக்கப்பட்டது. தீர்ப்பின்படி இவ்வழக்கில் தொடர்புடைய மீதி 4 பேரும் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். பின்னர் மாமுனுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை கட்டாயமாக மறு ஆய்வு செய்ய வேண்டுமென உயர்நீதிமன்றம் பரிந்துரைத்தது.

எனினும், கடந்த ஆண்டு நவம் பர் 10 ஆம் திகதி தீர்ப்பை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டிருந்த அவரது மேன்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றத்தின் மேன்முறையீட்டுப் பிரிவு நிராகரித்தது.

தூக்கு தண்டனையை நிறைவேற்றிய பின்னர் மாமுன் இறந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்தனர். பின்னர் அவரது சகோதரரிடம் மாமுனின் உடல் ஒப்படைக்கப்பட்டது.

# கொழும்பு சாயி மத்திய நிலையத்தின் 52 வருட பூர்த்தி ஒன்றுகூடல் வைபவம்





கொழும்பு சாயி பாபா மத்திய நிலையத்தின் 52 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதன் உறுப்பினர்களின் வருடாந்த ஒன்றுகூடல் வைபவம், சமீபத்தில் கொழும்பு - புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள சாயி நிலையத்தில் நடைபெற்றது. சாயி மத்திய நிலையத் தலைவர் எஸ். என். உதயநாயகம் தனது பாரியார் சகிதம் மங்கல விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

சாயி மகளிர் சங்கத் தலைவி திருமதி.சர்வாசண்முகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் சாயி மத்திய நிலைய ஸ்தாபக தலைவர் அமரர் எஸ்.டி.சிவநாயகம் மற்றும் சாயி மகளிர் சங்க ஆரம்பகாலத் தலைவி அமரர். மங்களவதி சிவநாயகம் ஆகியோர் சாயி நிலையத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவைகளை நினைவு கூர்ந்தார்.

ஆரம்ப நிகழ்வாக, சாயி மகளிர் சங்க உறுப்பினர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. தொடர்ந்து மெல்லிசைப் பாடல், குழு நடனம், நாடகம், கோலாட்டம் என்பனவும் நடைபெற்றன. இதனையடுத்து சாயி மத்திய நிலைய சிரேஷ்ட உறுப்பினரும் உபதலைவருமான சிவா இராஜஜோதி 'சாயி நிலையத்தின் ஆரம்ப காலம்' எனும் தலைப்பில் உரையாற்றியபோது கூறியதாவது:

'1966 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் மருத்துவர் (செல்வி) கணேசாள் அருணாசலம்பிள்ளையால் ஒரு பஜனை மன்றமாக உருவாகிய இந்த சாயி ஸ்தாபனம், பின்னர் ஒரு சத்சங்கமாகப் பரிணமித்து, தொடர்ந்து 8 வருடங்களாக இயங்கி வந்த நிலையில், 1974 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பிரபல பத்திரிகை ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம் அவர்களின் முயற்சியால் உலக சாயி அமைப்பின் ஆதரவுடன் இந்த சாயி சத் சங்கம், 'சாயி மத்திய நிலையம்' என்ற உயர் அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டது. 1975 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இந்த சாயி மத்திய நிலையத்தின் முதலாவது தலைவராக சிவநாயகம் ஏகமனதாகத் தெரிவானார். தொடர்ந்து 25ஆண்டுகள் அவர் தலைவராகப் பணியாற்றியிருந்தார்.

2000 ஆம் ஆண்டில் (22.04.2000) சிவநாயகம் அமரத்துவம் அடைந்தமையை அடுத்து, அவரது புதல்வரும் சாயி மத்திய நிலையத்தின் அப்போதைய உப தலைவர்களில் ஒருவராகவும் விளங்கியஎஸ்.என். உதயநாயகம், இந்தசாயி ஸ்தாபனத்தின் தலைவராக ஏகமனதாகத் தெரிவானார். உதய நாயகம் கடந்த 18 ஆண்டுகளாக இந்தசாயி ஸ்தாபனத்தின் தலைவராக இருந்து சங்கத்தை சிறப்பாக வழி நடத்தி வருகின்றார். உதயநாயகத்தின் தலைமைத்துவத்தின் கீழ் தான், எமது சாயி ஸ்தாபனத்துக்கென சொந்தமான காணி கொள்வனவு செய்யப்பட்டு. அதில் இரண்டு மாடிகள் கொண்ட 'சாயி நிலையம்'அமையப்பெற்றது.

அத்துடன் சீரடி சாயி பாபாவுக்கு தனியான ஒரு கோவில் உருவாக்கப்பட்டமையும், பக்கத்தில் உள்ள மற்றுமொரு காணி கொள்வனவுசெய்யப்பட்டு, அதில் சீரடிசாயி பிரார்த்தனை மண்டபம் நிர்மாணிக்கப்பட்டமையும், தலைவரின் நிர்வாகத்தில்தான். மேலும் சாயி ஊர்வலத்துக்கென தேக்கு மரத்தில் எழில்மிகு ரதம் அமைக்கப்பட்டமையும், பகவான் சத்யசாயி பாபாவினதும்,மகான் சீரடி சாயி பாபாவினதும் பிரமாண்டமான வெண்பளிங்குத் திருவுருவச் சிலைகள் மற்றும் ஐம்பொன்னினாலான எழுந்தருளி மூர்த்திகளும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டமையும் உதயநாயகத்தின் தலைமைத்துவத்தின் கீழ் நடைபெற்ற கைங்கரியங்கள் என்பதை கூறிக்கொள்வதில், எமது சங்கம் பெருமிதம் அடைகின்றது' என்றார்.

நிகழ்வில் ஓர் அங்கமாக, சாயி மத்திய நிலைய நிர்வாக சபை, சாயி மகளிர் சங்கம், சாயி தொண்டர் அணி ஆகியவற்றின் சார்பில், தலைவர் எஸ்.என். உதயநாயகமும் அவரது பாரியாரும் கௌரவிக்கப்பட்டனர். சாயிமகளிர் சங்க செயலாளர் திருமதி. சசிலேகா இராஜஜோதி நன்றியுரை ஆற்றினார். இதன் பின்னர், சாயி மகளிர் சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்ட 'சங்கீத நாற்காலி' - நிகழ்வும் இடம்பெற்றது

(இ

# முல்லைத்தீவு மாவட்டத்தின் இளைஞர் கழக மாவட்ட சம்மேளனத் தலைவர் தெரிவானார்







முல்லைத்தீவு மாவட்டத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான இளைஞர் கழக மாவட்ட சம்மேளன தலைவராக தரணிதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

இளைஞர்களுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை அவர்களுடைய திறன்களை வளர்க்கும் முகமாக சேவைகளை ஆற்றி வருகின்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஓர் அங்கமாக திகழ்கின்ற இளைஞர் கழகத்தினுடைய முல்லைத்தீவு மாவட்டத்துக்கான இளைஞர் கழக மாவட்ட சம்மேளன நிர்வாக தெரிவுகள் இடம்பெற்றுள்ளன

இதன் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டுக்கான நிர்வாகம் கலைக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டுக்கான முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்துக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் துணுக்காய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தை சேர்ந்த கி தரணிதரன் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவராக தேர்தல் மூலம் தெரிவாகி உள்ளார் அதனைத் தொடர்ந்து நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்துக்கான 2019 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு இளைஞர் கழக மாவட்ட சம்மேளனத்தினுடைய முன்னாள் தலைவர் லக்சிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜா குகநேசதாசன் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்சேவை அதிகாரி மா. சசிகுமார், இளைஞர் சேவை அதிகாரிகள் பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களின் உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். (இ - 81)




# இன்று வீபூதி புதன்

**"மக்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக அறச்செயல்களைச் செய்யாதீர்"**

எல்லா நாள்களையும் போல் அல்ல. அன்று யேசுவின் தவப் பயணம் ஆரம்பிக்கும் நாள் தவக்காலம் ஆரம்பிக்கும் நாளாக கிறிஸ்தவர்களால் நினைவு கூரப்படும் இந் நாளாகும். "மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய் மண்ணுக்கே திரும்பி வாய்" என மனிதனின் மறுவாழ்வை இறைவனின் பாடுகளை எமது வாழ்வோடு சிந்திக்க சங்கமிக்க தூண்டும் காலமே இத் தவக்காலம்.

இறைவன் தனது தியாக பயணத்தை ஆரம்பிக்கு முன் 40 நாள்கள் தியானித்து தன்னை திடப்படுத்தி தவக் காலத்தை பயனுள்ள தாக்க செப, தவ, தியாக வாழ்வை புடமிடவும் ஆரம்பிக்கும் நாளாக இன்றைய நாளை சகல கிறிஸ்தவர்களும் ஆலயங்களில் கூடி இறைவழிபாட்டுடன் ஆரம்பிக்கும் நாளாகும்.

சர்வ மதங்களும் பொதுவாக வழிபாடுகள் உபவாசங்கள், விரதங்கள், ஒறுத்தல்கள், பிறரன்பு பணிகளில் ஈடுபாடுவார்கள் தமது வழிபாடுகளை வாழ்வால் வெளிப்படுத்தும், தர்மகாரியங்கள், விரதங்கள் யாவும் மக்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக அறச் செயல்களாயோ, உபவாசங்களையோ செய்யாதீர். அப்படி செய்பவர்கள் இறைவனிடம் கைமாறு பெற்றுவிட்டார்கள். உண்மையில் உங்கள் செயல்களில் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்கு தெரியாது இருக்கட்டும். மறைவாய் உள்ளதை காணும் உங்கள் தந்தையான கடவுளும் உங்களுக்கு கைமாறு செய்வார் என்ற நற்செய்தி எமது வாழ்வை தூய்மையாக்கும்.

மண்ணில் பிறந்த நாம் வாழும் சூழலில் எமது அயலவர் வீட்டில் கரிசனை உள்ளோராய் அவர்களின் துன்ப துயரங்களில் பங்கேற்பதும் வாழ்வால் பகிரும் அன்பு செயலாக அயலானில் இறை உறவை பகிரும்போது இத் தவக் காலத்தின் புனிதம் பிறரின் மகிழ்வால் வெளிப்படுத்தப்படும். இதுவே எமது பிறப்பின் அழைத்தலுக்கு அர்த்த மூட்டும் தவப்பயண ஆரம்பமாகும்.

மாமிச தவிர்ப்பும் உண்ணாநோன்பும் எமது ஒறுத்தல் முயற்சியாக தவக்காலத்தை புனித காலமாக கடைப்பிடித்த போதும் எமது செயல்கள், தொடர்பாடல்களிலும் பிறருக்கான உதவிகள்மூலமும், வன்முறை அற்ற தொடர்பாடல்கள் மூலம் இறை தியானத்தில் ஒன்றித்து 40 நாள்களும் ஏற்படும் சவால்களை வெல்ல மனப்பக்குவத்தை ஏற்படுத்தும் ஒவ்வொரு செயல்களும் ஆன்மீகத்தை ஆழப் படுத்தி மனித மாண்பை வெளிப்படுத்தித் தவக்கால புனித காலத்தை அர்த்தமுள்ளதாக்குவோம்!

- செ.யோசப்பாலா -

# சிறுபான்மையினக் கட்சிகளுக்கான மரணப்பொறியே 20 ஆவது திருத்தம்!

## வேலுகுமார் எம்.பி. காட்டம்

கொழும்பு, மார்ச் 06

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு ஒருபோதும் ஆதரவளிக்கப் போவதில்லை என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட எம்.பியுமான வேலுகுமார் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக இல்லாதொழிக்க கோரி மக்கள் விடுதலை முன்னணியால் முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 20 ஆவதுதிருத்தச்சட்டவரைவு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஆலை இல்லாத ஊரிலே இலுப்பைப்பூ சர்க்கரை என்பது போல், இலங்கையில் உரிமைகள் மறுக்கப்பட்டு வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையானது ஏதேனுமொரு வழியில் பயனுடையதாக – பாதுகாப்பு கவசமாக இருந்து வருகின்றது. எனவே, அந்த முறைமையை நாம் பாதுகாக்க வேண்டும். மாறாக இல்லாதொழிப்பதற்கு துணைபோகக்கூடாது.

ஜனாதிபதித் தேர்தலின்போதுதான் முழு இலங்கையும் ஒரு தேர்தல் தொகுதியாக கருதப்படுகின்றது. சிறுபான்மையின மக்களின் வாக்கு வங்கியும் தீர்மானிக்கும் சக்தியாக மாறுகின்றது. இக்காலப் பகுதியில்தான் தமிழ் பேசும் மக்களுக்கு தமது உரிமைகளை வலியுறுத்திப் பெறுவதற்குரிய வழிகள் திறக்கப்படுகின்றன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீடிப்பதால்தான், சிறுபான்மையின மக்கள் மீதும் கட்டாயம் கவனம் செலுத்தியாக வேண்டும், அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற தீர்மானத்துக்கு அரச தலைவர்கள் வருகின்றனர்.

இம்முறைமை நீக்கப்படுமானால் சிறுபான்மையின மக்கள் பேரம் பேசும் சக்தியை இழப்பதுடன், அரசியல் ரீதியில் அநாதைகளாக்கப்படும் சூழ்நிலையும் உருவாகும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் ஜனநாயகத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்த சரத்துகள் அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக நீக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலும் அதில் கையடிக்கவேண்டிய அவசியம் இல்லை.

20 ஆவது திருத்தச்சட்டமூலமானது சிறுபான்மையின மக்களின் அரசியல் இருப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகும். ஆகவே, ஜனநாயகம் என்ற போர்வையில் அதற்கு சிறுபான்மையின கட்சிகள் ஆதரவு வழங்கினால் இறுதியில் அது இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கிய கதையாகவே அமைந்துவிடும்.

சுருக்கமாக சொல்வதாயின், 20 ஆவது திருத்தச்சட்ட மூலமானது சிறுபான்மையினக் கட்சிகளுக்கான மரணப் பொறியாகும். அதை நிதானமாகக் கையாண்டு தோற்கடிக்க வேண்டும்.

எமது கட்சியும், தமிழ் முற்போக்கு கூட்டணியும் இந்நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றன. அனைத்து சிறுபான்மையினக் கட்சிகளும் 20 இற்கு எதிராக ஓரணியில் திரளும் என நம்புகின்றோம்.

அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே ஜே.வி.பி. 20 ஐ கொண்டு வருகின்றது. அதை எதிர்ப்பதால் ஜனநாயக விரோதிகள் என்ற முத்திரையை எம்மீது குத்துவதற்கு அக்கட்சி முயற்சிக்கலாம்.

நாம் ஜனநாயகத்துக்கு எதிரானவர்கள் அல்லர். எம்மக்களுக்கு அநீதி இழைக்கும் யோசனையாக இருப்பின் அதை எந்தக் கட்சி கொண்டுவந்தாலும் எதிர்ப்போம்.

ஐந்து நட்சத்திர ஜனநாயகத்துக்கு ஆசைப்பட்டு எம்மக்களுக்கு தற்போது இருக்கும் ஜனநாயக உரிமைகளை இழப்பதற்கு நாம் தயாரில்லை. அதாவது, 'கோட்சூட்'டுக்கு ஆசைப்பட்டு கட்டியிருக்கும் கோவணத்தை இழக்கும் அரசியலை நாம் நடத்தவில்லை – என்றார். (ஐ)

# அமெரிக்காவுடன் இலங்கை இரகசிய பாதுகாப்பு உடன்பாடு

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமெரிக்காவுடன் இரகசியப் பாதுகாப்பு உடன்பாடுகளில் கையெழுத்திட்டுள்ளனர் என்றும், இதனால், அமெரிக்காவின் கொல்லைப் புறமாக இலங்கை மாறும் என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில்,

இதுபோன்ற அடிபணிவு பாதுகாப்பு உடன்பாடுகளில் கையெழுத்திடுவதற்கு இலங்கை அரசுக்கு அதிகாரமில்லை. எனவே, அரசு உடனடியாக இந்த முயற்சியை நிறுத்த வேண்டும்.

அதிகாரபூர்வமாக ஓர் இராணுவத் தளம் நிறுவப்படாத போதிலும், 20 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகக் கூடிய இந்த இரண்டு உடன்பாடுகளும், இலங்கையில் ஓர் அமெரிக்க இராணுவத் தளத்தை அமைப்பதற்குச் சமமானதாக இருக்கும்.

இந்த உடன்படிக்கைகளின்படி, அமெரிக்காவின் இராணுவ தளத்தை பராமரிப்பதற்கான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கு இலங்கை அரசு கடமைப்பட்டுள்ளது.

அத்துடன் எந்தவொரு போரின் போதும், அமெரிக்காவின் பக்கமே இலங்கை நிற்க வேண்டும் என்றும் அழுத்தம் கொடுக்கிறது.

இந்த உடன்பாடுகளில் இருந்து விலகிக் கொள்வது, இலகுவான விடயம் அல்ல.

இந்த உடன்பாடுகளால் இலங்கை, அமெரிக்காவின் ஒரு தளமாக மாறுவது தவிர்க்க முடியாதாகி விடும்.

எனவே, இந்த உடன்பாடுகளில் கையெழுத்திடவோ, அல்லது இந்த உடன்பாடுகளை நீடித்துக் கொள்ளவோ கூடாது என்று அரசைக் கோருகிறோம். என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# இலங்கையில் திரவ எரிவாயு மின் உற்பத்தித் திட்டம்

## கண்வைக்கும் சீனா

கொழும்பு, மார்ச் 06

இலங்கையின் மின் விநியோகக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு, திரவ எரிவாயு மின்உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு உதவத் தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது என மின்சக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்கவைச் சந்தித்த இலங்கைக்கான சீனத் தூது வர் செங் ஷியுவான் தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.



இலங்கையில் எரிவாயு மின்நிலையங்களை அமைப்பது குறித்து இந்தச் சந்திப்பின் போது கவனம் செலுத் தப்பட்டதுடன், அம்பாந்தோட்டையில் எரிவாயு மின் நிலையம் ஒன்றைச் சீனாவின் உதவியுடன் அமைப்பதுகுறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், சீனாவின் பிரதான மின் நிலையங்களைப் பார்வையிடுவதற்கு அங்கு பயணம் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு சீனத் தூதுவர் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ)

# முறைப்பாடுகளை ஏற்கும் பணி வியாழக்கிழமையுடன் நிறைவு

கொழும்பு, மார்ச் 06

அரசநிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கருதப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முறைப்பாடுகள் ஏற்கும் காலம் நாளை வியாழக்கிழமை நிறைவடைகிறது.

நேற்று முன் தினம் வரை இந்த ஆணைக்குழுவிற்கு 295 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதியில் இருந்து 2018ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதூர் ஆயுதப் பொதி வழக்கில் இதுவரை 23 பேர் கைதாகினர்

## அவர்களில் சிங்களவர்களும் அடக்கம்

வவுனியா, மார்ச் 06

வவுனியா – கனகராயன்குளம், புதூர் பகுதியில் ஆயுதப் பொதியை வீசிவிட்டு ஒருவர் தப்பிச் சென்ற சம்பவத்தை அடுத்து, பொலிஸார் மற்றும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் இதுவரை 23 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.


கடந்த ஜனவரி மாதம் 2 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக கடந்த புதன்கிழமை அதிகாலை மட்டக்களப்பைச் சேர்ந்த வேந்தன் என்பவர் மன்னாரில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரியாக அடையாளம் காணப்பட்ட அவரிடம் தொடர்ந்தும் தீவிர விசாரணையை முடுக்கி விட்டுள்ள கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் வெள்ளிக்கிழமை மேலும் இருவரை கைது செய்து விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர். அந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களில் இருந்து மதகுரு மற்றும் 5 சிங்களவர்களும் உள்ளடங்கியுள்ளனர். இவர்கள் வெளிநாடுகளுக்கு ஆட்கடத்தல் மற்றும் ஆயுத விற்பனையில் ஈடுபட்டு வருகின்றமையும் தெரியவந்துள்ளது.

பாதாள உலகக் குழுக்களை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப் புலிகளினால் பதுக்கி வைக்கப்பட்ட ஆயுதங்களை மீட்டு அவர்களுக்கு விற்பனை செய்து வந்துள்ளதுடன் மன்னாரில் கைது செய்யப்பட்டவரே இதனை இயக்கி வந்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் இலுப்பைக்குளம் பகுதியில் கைது செய்யப்பட்ட பெண்ணொருவரின் வீட்டில் இருந்து கிளைமோர் குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 23 பேரும் பல்வேறு இடங்களில் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றமையுடன் அவர்களுடன் தொடர்புபட்ட சிலர் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது. (ஐ)



# தொடர்ந்து முதலிடத்தில் மன்செஸ்டர் சிற்றி

இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில், தொடர்ந்தும் முதலிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி நீடிக்கின்றது.

எவெர்ற்றனின் மைதானத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அவ்வணிக்கும் லிவர்பூலுக்குமிடையிலான போட்டி சமநிலையில் முடிவடைந்தமையைத் தொடர்ந்தே, இங்கிலாந்து பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தில் மன்செஸ்டர் சிற்றி நீடிக்கிறது.

இப்போட்டியில், லிவர்பூலின் நட்சத்திர முன்கள வீரரான மொஹமட் சாலாவின் உதையை, எவெர்ற்றனின் கோல் காப்பாளர் ஜோர்டான் பிக்போர்ட் முதற்பாதியில் அற்புதமாகத் தடுத்ததுடன், அவரின் இறுதி நேர கோல் பெறும் முயற்சியை எவெர்ற்றனின் பின்கள வீரர் மைக்கல் கீன் தடுத்த நிலையில், போட்டி 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

(ஐ)

# உலகக் கிண்ணத்தில் சகல அணிகளையும் அச்சுறுத்துவோம்!

உலகக் கிண்ண தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி, அனைத்து அணிகளையும் அச்சுறுத்தும் என அணியின் முன்னாள் சகலதுறை வீரரான டுவைன் பிராவோ தெரிவித்துள்ளார்.

தற்போது அசுர பலமடைந்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, தற்போது சொந்த மண்ணில் இங்கிலாந்தை மிரட்டி வருகின்ற பின்னணியில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்–

எங்களது அணியில் சிறந்த இளம் வீரர்கள் உள்ளனர். அவர்கள் துடுப்பாட்ட திறனில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளனர். முதல் நிலை அணியான இங்கிலாந்துக்கு எதிராக விளையாடியதை பார்க்கும்போது சிறப்பாக இருந்தது.

நான் அணித்தலைவர் ஜேசன் ஹோல்டர், மற்ற வீரர்களிடமும் பேசினேன். இந்த அணி உலகக் கிண்ண தொடரில் அனைத்து அணிகளுக்கும் அச்சுறுத்தலாக இருக்கும். யாராக இருந்தாலும் அவர்களுக்குரிய நாட்களில் சிறப்பான திறமையை வெளிப்படுத்த முடியும். ஆனால், அனுபவம் மற்றும் இளைஞர்களின் கூட்டணி சிறப்பாக உள்ளது – என்றார்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னதாக வீரர்களுக்கும், கிரிக்கெட் சபைக்கும் இடையில் நிலவிய முறுகல் நிலையினால் பெரும்பாலான முன்னணி வீரர்கள் அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்டனர்.


முக்கியமாக கிறிஸ் கெய்ல், கிரன் பொலாா்ட், ஆந்ரே ரஸ்ஸல், சாமுவேல்ஸ், சிமோன்ஸ், சுனில் நரைன், பிளெட்சர், டேரன் சமி, ஸ்மித், டுவைன் பிராவோ போன்ற வீரர்கள் ஒட்டுமொத்தமாக அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்டனர்.

இதன்பிறகு பெரும்பாலும் புதுமுக வீரர்களை கொண்டே களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, படுதோல்வியடைய நீண்ட பேச்சுக்கு பின்னர் டுவைன் பிராவோ, கிறிஸ் கெய்ல், கிரன் பொலாா்ட், ஆந்ரே ரஸ்ஸல், சாமுவேல்ஸ், சிமோன்ஸ் ஆகிய வீரர்கள் அவ்வப்போது அணிக்காக விளையாடி வந்தனர்.

இதற்கிடையில் சிலர் உபாதை, வெளிநாட்டு ரி20 கிரிக்கெட் தொடர்களில் அதிகம் கவனம் செலுத்த, சில வீரர்கள் முற்று முழுதாகவே அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்டு விட்டனர்.

தற்போது டுவைன் பிராவோ சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற கிறிஸ் கெய்ல் மற்றும் ஆந்ரே ரஸ்ஸல் ஆகியோருக்கு மட்டும் அணியில் நிரந்தர வாய்ப்பு கிடைத்துள்ளது.

அத்தோடு தற்போது சிம்ரான் ஹெட்மியர், சாய் ஹோப், எவீன் லீவிஸ், நிக்கோலன் பூரான், ஒசேன் தோமஸ், ஆஷ்லி நெர்ஷ், ஜோன் கெம்பல் போன்ற சிறந்த புதுமுக வீரர்களை கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி அனுபவ வீரர்களுடன் இணைந்து தற்போது சிறப்பாக விளையாடி வருகின்றது.






# ரியல் மட்ரிட் அணியை பந்தாடிய பார்சிலோனா

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் லா லிகா உதைபந்து தொடர், தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியொன்றில், பார்சிலோனா அணியும், ரியல் மட்ரிட் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

உதைபந்து அரங்கில் எல் கிளாஸிக்கோ என வர்ணிக்கப்படும் இப்போட்டியானது, சாண்டியாகோ பெர்னபேயு விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில், ஆரம்பம் முதலே இரு அணிகளும் ஆக்ரோஷமாக விளையாடின. எனினும் இரு அணிகளினதும் முன்னணி வீரர்களால் கோல் அடிக்க முடியவில்லை.

போட்டியின் 26ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் மத்திய கள வீரரான இவான் ரக்டிக் அணிக்காக முதல் கோலை போட்டு, இரசிகர்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தினார்.

இதனையடுத்து, ரியல் மட்ரிட் பதில் கோல் போட கடுமையாக முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை. இதனால் முற்பாதியில் 1-0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா அணி முன்னிலைப் பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாதியில், இரு அணி வீரர்களும் கோல் போட முட்டி மோதிக்கொண்டனர்.

ஆனால் இரு அணிகளினதும் பாதுகாப்பு அரண்களை தாண்டி, முன்கள வீரர்களால் கோல் எல்லைக்குள் நுழைய முடியவில்லை.

மேற்கொண்டு இரு அணிகளாலும் கோல் அடிக்க முடியாததால், பார்சிலோனா அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம், லா லிகா உதைபந்து தொடரில் சம்பியன் பட்டத்தை வெல்லும் வாய்ப்பை பார்சிலோனா அணி உறுதி செய்தது.

ஏற்கனவே, கோபா டெல் ரே போட்டியில் ரியல் மட்ரிட் அணியை வெளியேற்றிய நிலையில் பார்சிலோனா இந்த போட்டியிலும் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டியது.

தற்போது புள்ளி பட்டியலில் முதலிடத்தில் உள்ள பார்சிலோனா அணி 12 புள்ளிகள் முன்னிலை பெற்றுள்ளது. அத்தோடு சம்பியன் பட்டத்தை தக்க வைக்கும் வாய்ப்பையும் உறுதி செய்துள்ளது.

# ஆசிய விளையாட்டு விழாவில் மீண்டும் கிரிக்கெட் சேர்ப்பு

விளையாட்டு இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த 19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில், மீண்டும் கிரிக்கெட் சேர்க்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 2022ஆம் ஆண்டு சீனாவின் ஹாங்ஷு நகரில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட் விளையாட்டு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்புதலை ஆசிய ஒலிம்பிக் சபை அளித்துள்ளது. கடந்த 2010ஆம் ஆண்டு மற்றும் 2014 ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இடம் பெற்றிருந்த கிரிக்கெட் போட்டி, அதன்பின் 2018ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் இருந்து நீக்கப்பட்டது.

மீண்டும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட் போட்டியைச் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது. இதையடுத்து, 2022ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டில் கிரிக்கெட் சேர்க்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆசிய ஒலிம்பிக் அமைப்பின் துணைத் தலைவர் ரன்திர் சிங் கூறுகையில்–

2022ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கான முடிவு ஆசிய ஒலிம்பிக் சபை பொதுக்குழுவில் எடுக்கப்பட்டது. சீனாவின் ஹாங்ஷு நகரில் கிரிக்கெட் விளையாடப்படும்– என கூறினார்.

2022ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட் சேர்க்கப்பட்டு இருப்பதால், பெரும்பாலும் ரி-20 கிரிக்கெட் விளையாடப்படுவதற்கே அதிகமான வாய்ப்புகள் இருக்கின்றன.

கடந்த, 2014ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் இலங்கையும், மகளிர் பிரிவில் பாகிஸ்தானும் தங்கம் வென்றன. 2010ஆம் ஆண்டில் பங்களாதேசும், பாகிஸ்தானும் தங்கம் வென்றன.

கடந்த 1998ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டில் கூட கிரிக்கெட் போட்டி விளையாடப்பட்டது.

கோலாலம்பூரில் நடந்த பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் ரோன் போலக் தலைமையிலான தென்னாபிரிக்கா அணி தங்கத்தையும், ஸ்டீவ் வோஹ் தலைமையிலான ஆஸ்ரேலியா அணி வெள்ளியும் வென்றன.

ஆசிய விளையாட்டு போட்டிகளில் 2010ஆம் மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் கிரிக்கெட் போட்டி இடம் பெற்றிருந்தது. ஆனால் தொடர்ச்சியாக சர்வதேச போட்டிகளை காரணம் காட்டி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை, இந்தப் போட்டிகளுக்கு அணியை அனுப்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikathir



## ஒரே பார்வையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★கமாண்டோக்களின்கொடுப்பனவு 5000 ரூபாவாக உயர்த்தப்படும். வாடகைக் கட்டணம் 100 வீதம் அதிகரிக்கப்படும். சீருடை கொடுப்பனவு அதிகரிக்கப்படும்.

★ ஓய்வூதிய முரண்பாடுகளைச் சரி செய்ய 1200 கோடி ரூபா ஒதுக்கீடு.

★ஜூலை முதலாம் திகதி முதல் அரச உத்தியோகத்தர்களுக்கு 2500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும். இதற்கென 4000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ இவ்வாண்டு ஆரம்பிக்கப்படும் இலகு ரயில் திட்டத்திற்கு 500 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ இலங்கை போக்குவரத்து சேவைக்கு 250 புதிய பஸ்கள், இத்திட்டத்திற்கு 150 கோடி ரூபா ஒதுக்கீடு.

★மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் பஸ் சேவைகளுக்கு முற்கொடுப்பனவு அட்டைகள் மற்றும் ஜி.பி.எஸ். சேவைகள் ஆரம்பிக்கப்படும்.

★ பொதுப் போக்குவரத்து சேவை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் பஸ் சேவை அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

★போகம்பரைச்சிறைச்சாலை பொது இடமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கென 75 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ மாத்தளை - பௌனார்ட் அலுவிஹாரே விளையாட்டரங்கும் கொலன்னாவை மல்லம ராச்சி விளையாட்டுத்திடலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

★சுவசெரிய திட்ட அபிவிருத்திக்கு 60 கோடி ரூபா ஒதுக்கீடு (2 ஆண்டுகளுக்கு மேல்).

★ தேசிய தொழில் தகுதியுடனான தொழிற்பயிற்சித் திட்டங்களை இலங்கை இராணுவம் நடத்தவுள்ளது.

★தமிழ்மொழி ஆசிரியர்களுக்கான பயிற்சிகளுக்கு 40 கோடி ரூபா ஒதுக்கீடு.

★பல்கலைக்கழக உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு 2500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

★ க.பொ.த உயர் தரத்தில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கு வெளிநாட்டில் பயில நிதியுதவி வழங்கப்படும். ஓகஸ்ட்டில் இத்திட்டம் 14 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்படும். ஹவார்ட், ஒக்ஸ்போர்ட் மற்றும் எம்.ஐ.ரி. போன்ற பல்கலைக்கழகங்களுடன் தற்போது கலந்துரையாடல் இடம்பெற்று வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பெறும் இலங்கை மாணவர்கள் கல்வியை முடித்துக் கொண்ட பின் இலங்கையில் 10 வருடங்கள் பணியாற்றவேண்டும்.

★ பாடசாலை உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு 320 கோடி ரூபா.

★400,000 டொலர்களுக்கும் மேல் முதலீடு செய்த வெளிநாட்டவர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு குடியிருப்பு விசா.

★ உள்நாட்டு கட்டுமான நிறுவனங்களுடன் இணையாமல், வெளிநாட்டு கட்டுமான நிறுவனங்களால் உள்நாட்டில் கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தங்களைப் பெற முடியாது.

★ எஸ்.எல்.ரி.டி.ஏ. இல் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்கள் மாத்திரம் 2020 ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஒன்லைன் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

★பதிவுசெய்யப்பட்ட ஹோட்டல்களுக்கு வெளிநாட்டு நாணய பற்றுச்சீட்டுகளுக்கு என்.பி.ரி. நீக்கம்.

★ நிதி அமைச்சில் வருவாய் புலனாய்வுப் பிரிவு அமைக்கப்படவுள்ளது.

★ பிங்கிரிய அபிவிருத்தி வலயத்திற்கு ரூபா 50 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

★உள்நாட்டு வருமான சட்ட மூலத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

★ இயந்திரங்களுக்கான துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களின் வரி விதிப்பு 2.5% குறைக்கப்படும்.

★தேசிய ஏற்றுமதி மூலோபாயத்திற்கு 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

★ ஹோம் சுவீற் ஹோம் - புதிதாக மணம் முடித்தவர்களுக்கான கடன் திட்டம் மூலம் முதல் வீட்டை வாங்கும் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கு ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான சலுகை கடன்கள் வழங்கப்படும். 6% வட்டி விகிதம், 25 ஆண்டுகளில் செலுத்தப்பட வேண்டும்.

★ போதை மருந்து தொடர்பான குற்றங்களுக்காக தண்டனையளிக்கப்பட்டவர்களுக்கு அம்பேபுஸ்ஸ மற்றும் வீரவில ஆகிய பகுதிகளில் விசேட பண்ணைகள் அமைக்கப்படும். அது சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும்.

★சிறுநீரக நோயாளர்களுக்கு 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கும் திட்டத்திற்கு 1,48 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

★ விசேட தேவையுடையவர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகிறது. அது 5000 ரூபாவாக அதிகரிக்கப்படும். அதற்கென 4,32 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

★ பல்கலைக்கழக மாணவர்களின் 50% க்கும் மேற்பட்டவர்கள் பெண்கள். ஆனால், பெண் தொழிலாளர்கள் 30%க்கும் குறைவாகவே உள்ளனர். வேலைத்தளத்தில் பெண்களின் பங்களிப்பை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். 3 மாதங்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்கும் நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகள் வழங்கப்படும்.

★கழிவறை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க 400 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரதான பஸ் நிலையத்திலும் ரயில் நிலையத்திலும் புதிய கழிவறைகள் நிர்மாணிக்கப்படும். கழிவறைகள் தனியார் துறையினரால் இயக்கப்படும்.

★ எமது அரசின் காலம் முடிவுறுவதற்கு முன்னதாக யாழ்ப்பாணத்துக்கான அதிவேக நெடுஞ்சாலை பணிகளை நிறைவு.

★ பருத்தித்துறை மற்றும் பேசாலையில் மீன்பிடித் துறைமுகங்களை அமைப்பதற்கு 130 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

★ தோட்டத் தொழிலாளர்கள் சம்பளப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும்

★ இலங்கை கறுவாப்பட்டைப் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. ஏற்றுமதிக்கு முன்னதாக அனைத்துப் பொருட்களின் தரமும் பரிசோதிக்கப்படும். கறுவாப்பாட்டைப் பயிற்சி நிலையத்திற்கு 7.5 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

★ ரயர்கள் மற்றும் ரப்பர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக 80 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. சிறு ட்ரக்குகள் மீது சுமத்தப்படும் வரிகள் குறைக்கப்பட வேண்டும்.

★ என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா திட்ட அபிவிருத்திக்கு 50 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

★இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு சலுகைகள் வழங்குவதற்கு என்டர்பிரைஸ் ஸ்ரீலங்காவை விரிவுபடுத்த வேண்டும்.

★ கம்பெரலிய அபிவிருத்தித் திட்டத்திற்கு 4,800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மிருசுவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யீனத்தால் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகனும் டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மிருசுவில் பகுதியிலிருந்து கொடிகாமம் நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனத்தை மறு பக்கத்தில் பயணித்துக் கொண்டிருந்த போக்குவரத்துப் பொலிஸார் மறித்தனர். இதனால் டிப்பர் சாரதி சடுதியாக பிரேக் பிடித்ததால் பின்புறமாக மோட்டார் சைக்கிளில் பயணித்த மகனும், தாயும் டிப்பர் வாகனத்துடன் மோதுண்டு படுகாயம் அடைந்தனர். அவர்கள் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற பகுதி வளைவான வீதிப் பகுதி. அத்துடன் டிப்பர் பயணித்த பகுதியின் மறு பக்கத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவாறே வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் டிப்பர் வாகனத்தை நிறுத்துமாறு சைகை செய்தமையால் இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாகச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## காப்புறுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளார்.

கூட்டுறவு காப்புறுதி நிறுவனத்தின் கிளிநொச்சிக் கிளை முகாமையாளரான காந்தலிங்கம் பிறேமரமணன் (வயது 32) என்பரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, வேப்பங்குளத்தைச் சேர்ந்த இவர் ஒரு பிள்ளையின் தந்தை ஆவார்.

உதயநகர் கிழக்கில் தங்கியிருக்கும் இவர், நேற்றுக் காலை தனது அலுவலகப் பணியாளருடன் அலுவலகத்துக்குப் புறப்படும் போதே மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் சரமாரியாக இவரை வெட்டியுள்ளார்.

தலை, கை, கால் மற்றும் உடம்பில் வெட்டுக்காயங்களுக்குள்ளான அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முன் உயிரிழந்துள்ளார்.

உறவினர் ஒருவரே இவரை வெட்டிக் கொலை செய்துள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

வெட்டிய நபர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சிகரெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

சிகரெட்டுகள் மீதான உற்பத்தித் தீர்வை 60 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட கூறுகளுக்கு 2019 மார்ச் 06 ஆம் திகதியிலிருந்து 12 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது.

இதனால் ஒவ்வொரு தனிக் கூறுக்குமான விலையானது சராசரியாக ரூபா 5 இனால் அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன் 2019 ஜூன் 01ஆம் திகதியிலிருந்து சிகரெட்டுகள் உற்பத்தி மீதான தேச கட்டுமான வரி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

வருடாந்த பண வீக்கம் மற்றும் மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி என்பவற்றைக் கொண்டு ஆகக் குறைந்த வருடாந்த தீர்வை அதிகரிப்புடன் விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு சிகரெட்டுகள் மீதான உற்பத்தித் தீர்வை விதிக்கப்படும்.

இது வருமான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் செலவீனத்தையும் கட்டுப்படுத்தும் என நிதி அமைச்சர் மங்கள சமரவீர மேலும் கூறினார். (ஐ)

## அரச ஊழியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்களுக்குமான இடைக்கால மாதாந்தக் கொடுப்பனவாக 2019 ஜூலை மாதம் 01 ஆம் திகதியிலிருந்து 2,500 ரூபாவை வழங்குவதற்குத் தான் முன்மொழிவதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார். (ஐ)

## பட்ஜெட் குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போம் என அதன் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

புதிய பட்ஜெட் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இரா.சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

கடனிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது, நாட்டின் வருவாய் மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது போன்றவை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அடங்கவில்லை.

ஆனால் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நன்மைகள் உள்ளதா என்பதை கூறுவதை விடவும் தீமைகள் இல்லை எனக் கூறலாம் - என்றார். (ஐ)

## வாகன விலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி அதிசொகுசு வாகனங்களுக்கான உற்பத்தி வரி திருத்தியமைக்கப்படவுள்ளதுடன், சிறிய கார்களுக்கான வரி குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கப்படவுள்ளது.

1300 சிசி திறன் கொண்ட வாகனங்களுக்கான உற்பத்தி வரியை 5 இலட்சம் ரூபாவினால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 800 சிசி-க்கு குறைந்த பெற்றோல் வாகனங்களுக்கான இறக்குமதி வரி ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவினாலும், 1000 சிசி-க்கு குறைந்த பெற்றோல் வாகனங்களுக்கான இறக்குமதி வரி ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவினாலும் அதிகரிக்கப்பட உள்ளது. (ஐ)

## ஏமாற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த முறையைப் போலவே 2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் அதிக வரிச் சுமை காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

பட்ஜெட் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே மஹிந்த மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூலமாக நாட்டை வளர்ச்சிப் பாதையில் முன்னெடுக்கவோ அல்லது மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவோ முடியாது.

இந்த வரவு-செலவுத் திட்டம் நாட்டை மேலும் கடன் சுமைக்குள் தள்ளும் வேலைத்திட்டமாக அமைந்துள்ளது.

நிதி அமைச்சரும் அரசும் மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றி வரிகளை கொண்டு ஆட்சியை நடத்தவே முயற்சித்து வருகின்றனர் - என்றார். (ஐ)

## புதிய அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் புதிய அரசமைப்புப் பணி ஓரிரு மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்சை நேற்று முன் தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாக அமெரிக்கத் தூதுவர் தமது கீச்சகப் பதிவு ஒன்றில் கூறியுள்ளார்.

ஆயினும் தற்போது இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய அரசமைப்பு முயற்சி தொடர்பிலேயே இந்தச் சந்திப்பின்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாகக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய அரசமைப்பு முயற்சி வெற்றியளிக்க அமெரிக்கா தன்னாலான முழுப் பங்களிப்பையும் வழங்கும் என அமெரிக்கத் தூதுவர் சம்பந்தனிடம் எடுத்துரைத்துள்ளார்.

இந்த அரசமைப்புப் பணி இழுத்தடிக்கப்படாமல் ஓரிரு மாதங்களுக்குள் பூர்த்தியாக்கப்படவேண்டும் என்றும் தூதுவர் வலியுறுத்தினார்.

இந்த அரசமைப்பு முயற்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், தடைகள் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் அமெரிக்கத் தூதுவருக்கு விளக்கிக் கூறினார்.

அத்துடன் ஜெனீவாவில் இலங்கை அரசுக்கு வழங்கப்படவுள்ள கால நீடிப்பு தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்டுள்ளது. (ஐ)

## 11 தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட தனது கைதைத் தடுக்கும் பொருட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில், கொழும்பில் கடத்தப்பட்டு திருகோணமலை கடற்படைத் தளத்தில் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் விவகாரத்தின் முக்கிய கர்த்தாவாக அப்போது பாதுகாப்பு அதிகாரியாக இருந்த சம்பத் முனசிங்க மீது முறைப்பாடு கிடைத்தது எனவும், அந்த விடயம் குறித்து அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்து, விசாரணை நடத்துமாறு தான் கோரினார் என்றும் கூறியுள்ளார்.

ஆனால், கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னகொட, இவ்விடயம் குறித்து அறிந்தவுடன் நடவடிக்கை மேற்கொண்டிருந்தால் ஐந்து பேரின் உயிர்களையாவது காப்பாற்றியிருக்கலாம் என அவரின் செயலாளராகப் பணியாற்றிய சமல் பெர்னாண்டோ சாட்சியம் அளித்துள்ளார்.

முன்னாள் கடற்படைத் தளபதி, தன் மீதான குற்றச்சாட்டைத் திசை திருப்புவதற்காக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவையும் இதில் இணைத்துள்ளார் எனச் சில அரசியல்வாதிகள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மக்களைத் திருப்திப்படுத்தக்கூடிய எதுவும் இந்த பட்ஜெட்டில் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் 2019ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்,

வடக்கு- கிழக்கில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான பெரிய திட்டங்கள் எதுவும் இந்த பட்ஜெட்டில் முன்மொழியப்படவில்லை.

குறிப்பாக செங்கல் வீட்டுத் திட்டங்களை மக்கள் விரும்பாத போதும் அவற்றைத் திணிக்கும் வகையில் வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழிவு இடம்பெற்றுள்ளது.

தொழிற்துறையை முன்னேற்றும் வகையிலோ, இளைஞர் யுவதிகளைக் கவர்கின்ற வகையிலோ இந்த வரவு - செலவுத் திட்டத்தில் முக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை.

வடக்கு-கிழக்கில் உள்ள தொழிற்சாலைகளை இயங்கவைப்பது தொடர்பில் பட்ஜெட்டில் எதுவும் கூறப்படவில்லை.

வடக்கு-கிழக்கு மக்கள் திருப்திப்படக்கூடிய திட்டங்கள் எவையும் உள்ளடக்கப்படவில்லை - என்றார். (ஐ)

# இனப்படுகொலைக்கு நீதி கோரி ஜெனீவாவில் திரண்ட தமிழர்கள்!










ஜெனீவா, மார்ச் 06

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கு நீதி வழங்கக் கோரி, ஜெனீவாவில் நேற்று முன் தினம் பெரும் கவனவீர்ப் புப்போராட்டம் ஒன்று முன்னெ டுக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கவுன்ஸிலின் 40 ஆவது கூட்டத்தொடர் ஜெனீ வாவில் நடைபெற்று வரும் நிலையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போர்க்குற்றத்திற்கு நிலை யான நீதி வேண்டும் என்றும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் இந்தப் போராட் டம் நடத்தப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் தொடர் பாக 10 ஆண்டுகள் கடந்த நிலையில் எந்தத் தீர்வும் எட்டப் படாத நிலையில், ஜெனீவா கூட்டத்தொடரில் ஐ.நா. அழுத் தம் வழங்குமாறு கோரியே இந் தப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.


ஜெனீவா ரயில் நிலையத் தில் இருந்து ஐ.நா. மனித உரிமை ஆணையகம் முன் றில் வரை இந்தக் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி இடம் பெற்றது.

அரசியல் கைதிகள் விடு தலை, காணாமல் ஆக்கப்பட் டோர் பிரச்சினை, மீள்குடியேற் றம் தொடர்பான பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மக ஜர் ஒன்றையும் தமிழ் அமைப் புக் கள் ஊடாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாள ருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கனடா, லண்டன், ஐரோப் பிய நாடுகளில் இருந்து தமிழ் சமூகத்தினர் என ஆயிரக் கணக்கில் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

# ஐ.நா. தீர்மானங்களை அரசு தட்டிக்கழித்தே வருகின்றது

## செல்வம் அடைக்கலநாதன் விசனம்



வவுனியா, மார்ச் 06

ஐ.நா. தீர்மானங்களை இலங்கை அரசு தட்டிக் கழிக்கும் போக்கே காணப் படுகின்றது. இதனால் கால நீடிப்பு வழங்கப்படக்கூடாது என ரெலோ அமைப்பின் தலைவரும், தமிழ்த் தேசி யக்கூட்டமைப்பின்நாடாளு மன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநா தன் தெரிவித்தார்.

வவுனியா அலுவல கத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது ஊடகவி யலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக் கும் போதே இவ்வாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்–

நாங்கள் ஐ.நா. சபை யின் கூட்டத்தொடரில் கால அவகாசம் வழங்கக்கூடாது என வலியுறுத்தி வருகின் றோம். ஆனால் இதனை நாம் தேர்தலுக்காகச் செய் வதாகக் கஜேந்திரகுமார் கூறி வருகின்றார். எங்க ளைப் பொறுத்தவரை ஐ.நா. தீர்மானம் நடைமு றைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி வருகின் றோம்.

ஐ.நா. தீர்மானங்கள் இலங்கை அரசால் நடை முறைப்படுத்தப்படவில்லை. அதைத் தட்டிக் கழிக்கும் செயற்பாடே காணப்படு கின்றது. ஐ.நா. தீர்மா னத்தை நடைமுறைப் படுத்துவதாகக் காணப்பட்ட இணக்கத்தில் இருந்து தாம் விலகிக்கொள்ளப்போவ தாக ஜனாதிபதி சொல்கிறார். ஆனால் நாங்கள் இலங்கை அரசுக்குக் கால அவகா சம் வழங்கக்கூடாது என வலியுறுத்துகிறோம். இதில் எந்த உள்நோக்கமும் கிடையாது.

எங்களைப் பொறுத்த வரை எங்கள் மக்களது விடுதலை, பிரச்சினைகள் வெல்லப்படும் வேண்டும் என்பதில் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின் றோம். எங்கள் மக்களின் பிரச்சினைகளை நாம் சர்வ தேசத்துக்குத் தெளிவாகச் சொல்லி வருகின்றோம்.

அழுத்தங்கள் தொடர்ச் சியாக கொடுக்கவேண்டும். காலநீடிப்பு வழங்கக்கூடாது என ரெலோ எல்லாத் தமிழ்க் கட்சிகளுடனும் பேசி வரு கின்றது. ஒற்றுமையாக எல்லாத் தமிழ்க் கட்சிகளும் கால நீடிப்பு வழங்கக் கூடாது என வலியுறுத்த வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்–என்றார். (ஐ–100)



நேற்று மாலை யாழ்ப்பாணம் வருகை தந்த சீனத் தூதுவர் செங் சூயுவான் தலைமையிலான சீனத் தூதரகக் குழுவினர் 'டான்' தொலைக் காட் சிக் குழுமத் தலைவர் எஸ்.குகநாதன் மற்றும் 'காலைக்கதிர்' நாளித ழின் ஆசிரியர் என். வித்தியாதரன் ஆகியோரைச் சந்தித்து உரையாடிய சமயம்....

# ஐ.நா. பிரதிநிதி முன்னிலையில் போர்க் குற்ற விசாரணை; மிகப் பாரதூரமான செயல்

## திஸ்ஸ விதாரண சீற்றம்



கொழும்பு, மார்ச் 06

ஐ.நா.வின் விசேட பிரதிநிதி ஒருவரை இலங் கைக்கு அழைத்துப் போர்க் குற்றங்களை விசாரிப் பது பாரதூரமான செயல் என சோசலிச மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் பிரதிநிதி திஸ்ஸ விதாரண இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அண்மையில் வடக்கில் 5 தமிழ்க் கட்சிகள் கூட்டம் ஒன்றை நடத்தின. அதில் போர்க் குற்றங் களை விசாரிக்க ஐ.நா.பிரதிநிதி ஒருவரை நாட்டுக்கு அழைப்பது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த யோசனையை அவர்கள் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் முன்வைக்கவுள்ளனர். அவர்களின் இந்த நடவடிக்கை நாட்டுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஐ.நாவுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் இருப்பதாகவும், அரசியல் கைதி களை விடுவிக்காதிருப்பது தொடர்பாகவும் விக் னேஸ்வரன் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்துள் ளார்.

அதில் சில உண்மைகளும் காணப்படுகின் றன. ஆகவே இவற்றுக்கு அரசால் பதில் வழங்க முடியும். பிள்ளையானை பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்திச் சிறையில் அடைத்தி ருப்பதும் அரசின் செயற்பாடாகும்.

இராணுவத்திடம் உள்ள காணிகளுக்கு நட்டஈடு வழங்கினால் மக்கள் வேறு இடங்களுக்குச் செல் லத் தயாராகவுள்ளனர்.

இவ்வாறான விடயங்களை உள்நாட்டுக்குள் ளேயே தீர்க்க முடியும். இதற்கு ஜெனீவாவின் விசேட பிரதிநிதி ஒருவர் அவசியம் இல்லை. நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கே இந் தச் செயற்பாடு நடைபெறுகின்றது.

புலம்பெயர்ந்தோர் சார்பில் பிரிட்ட னில் செயற்பட்ட இம்மானுவேல் என்ற பாதிரியார் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ளார். அவருக்கும், விக்னேஸ்வரனுக் கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

அரசு ஆறு மாதங்களுக்குள் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறியது. ஆனால் அதனைச் செய்யவில்லை.

தற்போது மனித உரிமைகள் கவுன் ஸிலில் இலங்கை அரசு சார்பில் யாரை யும் அனுப்பாமல் இருக்க எடுத்த முடிவு பிரிட்டனுக்கு ஏற்றவகையில் செயற்பட வழிவகுத்துள்ளது. அமெரிக்காவே இதன் பின்னால் இருந்து செயற்படுகின்றது– என்றார். (ஐ)

# கண்ணகிநகர் பகுதியில் வெடிபொருள்கள் மீட்பு!



கிளிநொச்சி, மார்ச் 06

கிளிநொச்சி கண்ணகி நகர்ப் பகுதியில் பாவ னைக்கு உதவாத நிலை யில் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப்படை யினரால் நேற்று இந்த வெடிப்பொருள்கள் மீட்கப் பட்டன.

கிளிநொச்சி அக்க ராயன் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கண்ணகி நகர் கழிவு நீர் செல்லும் ஆற் றுப் பகுதி யில்வெடிபொருள்கள்இருக்கின்றமை யை அவதானித்த கிராம மக்கள் அக்கரா யன் பொலிஸாருக்குத் தகவல் வழங் கினர்.

அக்கராயன் பொலிஸ் அதிகாரி கள் குழு நீதிமன்ற அனுமதியைப் பெற்று விசேட அதிரடிப்படையினர் மூலம் வெடிப்பொருள்களை மீட்டுள் ளது. எல்.எம்.ஜி. ரவைகள் ஒரு தொகுதி, மோட்டார் எறிகணை ஒன்று என் பன மீட்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் பயன் படுத்த முடியாத நிலையில் உள் ளன. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.